[illegible]

V 6. No. 8 23 Feb 1933

ന211, M28KN
N33.6.8.
18141

*KALANILAYAM*

தனிப்பிரதி விலை அணு மூன்று.

# கலாநிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ. சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6] 1933 ஹ பிப்ரவரி மீ 23உ [No. 8

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 141
2. அப்பர் (64 கலை-வியாகரணம்-குற்றியலிகரம்)
E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 143
3. தமிழ்ப் பாடம்
(நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 145
4. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 6-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 147
5. தேவகி (ஓர் நாவல்)
K. இராஜகோபாலன் 148
6. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலமையர் B.A.,B.L. 150
7. திருக்குறள் நீதி (அங்கவியல்)
A. இராமலிங்கம் 152
8. கலித்தொகை (பாலைக்கலி 5.)
T. A. கனகசபாபதிப் பிள்ளை 154
9. பொதிகை நிகண்டு (ஊகாராதி முதல் ஓகாரவருக்கம் வரையில்)
S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L., 154
10. சொல்லூடாட்டம் 13 156
11. வர்த்தமானம் 159

## கலாநிலயம்

18914

### சொன்னல் விரோதம் 7.

இராமனே கணவனுயின் சீதையின் கற்புச் சிறப்புடன் தோன்றுவது அருமையன்றென்றும், வெறுத்தற்குரியவோர் நாயகனையும் விரும்பிப் போற்றுகின்ற மடவார்தம் கற்புத்தானே தெய்வக்கற்பென்றழைத்தற்குரியதென்றும், அதுவே செவ்விய தருமத்தின் தன்மையென்றும், அதனையே கலங்கலில் காட்சிப் புலமையோர் பெரிதுவந்து பாராட்டுவாரென்றும், கணவன் மனைவி என்ற உறவினிற்போல் மற்றெல்லா மாறுட உறவுகளிலும் அவரவர் தம்மைத் தம்மைத் துறந்துகொள்ளும் இத்தகைய தூய்மையின் மேன்மையே இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்கின்ற வண்ண மாகின்றதென்றும், ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் செப்பிய சிறப்பையே, கலைதெரிபுலவர் டேய்ன் என்பவர் ஆங்கில இலக்கியத் தகவியின் உவகையுடன் கண்டு வியப்பதற்கு ஆதாரமாயிருந்த இடங்கள் பலவுள. அவைகளில், "ப்யூமாண்ட், ப்ளேட்சர்" (Beaumont and Fletcher) என்னும் ஆசிரியர் இயற்றிய நாடகங்களிலிருந்து சில உதாரணங்கள், டேய்ன், எடுத்துக் காட்டுகின்ருர்.

When they love, they are not tasting a forbidden fruit, but are binding themselves for their whole life. Thus understood love becomes almost a holy thing; the spectator no longer wishes to be spiteful or to jest; women do not think of their happiness, but of that of the loved ones; they aim not at pleasure, but at devotion. Euphrasia, relating her history to Philaster says :—

"My father oft would speak
Your worth and virtue; and as I did grow
More and more apprehensive I did thirst
To see the man so prais'd, but yet all this
Was but a maiden longing, to be lost
As soon as found; till sitting in my window,
Printing my thoughts in lawn, I saw a god
I thought (but it was you) enter our gates.
My blood flew out, and back again as fast
As I had puffed it forth and suck'd it in
Like breath; then was I called away in haste
To entertain you. Never was a man
Heav'd from a sheep-cote to a sceptre rais'd
So high in thoughts as I: You left a kiss
Upon these lips then, which I mean to keep,
From you forever. I did hear you talk
Far above singing! After you were gone
I grew acquainted with my heart and search'd
What stirr'd it so: Alas I found it love;
Yet far from lust; for could I but have lived
In presence of you, I had had my end."

She had disguised herself as a page, followed him, was his servant; what greater happiness for a woman than to serve on her knees the man she loves: She let him scold her, threaten her with death and wound her.

"Blest be that hand!
It meant me well. Again for pity's sake!

Do what he will, nothing but words of tenderness and adoration can proceed from this heart, these wan lips. Moreover she takes upon herself a crime of which he is accused, contradicts him when he asserts his guilt, is ready to die in his place. Still more she is of use to him with the princess Arethusa, whom he

loves; she justifies her rival, brings about their marriage and asks no other thanks but that she may serve them both. And strange to say the princess is not jealous.

*Euphrasia*:— "Never, sir, will I
Marry; It is a thing within my vow.
But if I may have leave to serve the princess
To see the virtues of her lord and her,
I shall have hope to live."

*Arethusa*:— "Come live with me
Live free as I do. She that loves my lord
Curst be the wife that hates her."

What notion of love have they in this country? Whence happens it that all selfishness, all vanity, all rancour, every little feeling, either personal or base flees at its approach? How comes it that the soul is given up wholly without hesitation, without reserve and only dreams henceforth of prostrating and annihilating itself as in the presence of a God? Biancha thinking Cesario ruined offers herself to him as his wife; and learning that he is not so, gives him up straightway, without a murmur:—

*Biancha*:—"So dearly I respected both your fame,
And quality, that I would first have perished,
In my sick thoughts, than even have given consent
To have undone your fortunes, by inviting
A marriage with so mean a one as I am
I should have died sure and no creature known
The sickness that had killed me. Now since I know
There is no difference 'twixt your birth and mine
Not much 'twixt our estates (If any be
The advantage is on my side) I come willingly
To tender you the first fruit of my heart
And am content t'accept you for my husband,
Now when you are at the lowest.

*Ceasario*:— "Why Biancha,
Report has cozened thee, I am not fallen
From my expected honors or possessions,
Tho' from the hope of birth-right."

*Biancha*:— Are you not?
Then I am lost again! I have a suit too;
You will grant it, if you be a good man.
Pray do not talk of ought what I have said t'ye
. . . . . pity me;
But never love me more...I will pray for you
That you may have a virtuous wife, a fair one,
And when I am dead...

*Ceasario*:—"Fy, fy!

*Biancha*:—Think on me sometimes with mercy for this tresspass.

*Casario*:— Let us kiss
At parting, as at coming!

*Biancha*:— This I have
As a free dower to a virgin's grave
All goodness dwell with you.

Isabella, Brachiano's duchess, is betrayed, insulted by her faithless husband; to shield him from the vengence of her family she takes upon herself the blame of the rupture, purposely plays the shrew, and leaving him at peace with his courtesan dies embracing his picture. Arethusa allows herself to be wounded by Philaster, stays the people who would hold back the murderer's arm, declares that he has done nothing, that it is not he, prays for him, loves him in spite of all, even to the end, as though all his acts were sacred, as if he had power of life and death over her. Ordella devotes herself, that the king, her husband, may have children; she offers herself for a sacrifice simply without grand words, with her whole heart:—

*Ordello*.—"Let it be what it may then, what it dare,
I have a mind will hazard it.

*Thierry*:—But, hark you;
What may that women merit, makes this blessing?

*Ordello*:— Only her duty sir

*Thierry*:— It is terrible.

*Ordello*:— It is so much the more noble.

*Thierry*:— It is full of fearful shadows

*Ordello*:— So is sleep sir,
Or anything that's merely ours, and mortal,
We were begotten gods else; but those fears
Feeling but once the fires of noble thoughts
Fly like the shapes of clouds we form, to nothing.

*Thierry*:— Suppose it death.

*Ordello*:— I do.

*Thierry*:—And endless parting
With all we can call ours, with all our sweetness
With youth, strength, pleasure, people, time nay reason!
For in the silent grave, no conversation,
No joyful tread of friends, no voice of lovers
No careful father's counsel, nothing is heard,
Nor nothing is, but all oblivion,
Dust and endless darkness; dare you woman,
Desire this place?

*Ordello*:— 'Tis of all sleeps, the sweetest:
Children begin it to us, strong men seek it,
And kings from height of all their painted glories
Fall, like spent exhalations, to this centre."

*Thierry*:— Then you can suffer?

*Ordello*:— As willingly as say it.

*Thierry*:— Martell, a wonder
Here is a woman that dares die—yet tell me,
Are you a wife?

*Ordello*:— I am sir.

*Thierry*:—And have you Children?
She sighs and weeps.

*Ordello*:— Oh, none sir.

*Thierry*:— Dare you venture
For a barren praise you shall never hear
To part with these sweet hopes.

*Ordello*:— With all but heaven."

Is not this prodigious? Can you understand how one human being can thus be separated from herself, forget and loose herself in another? They do lose themselves, as in an abyss. When they love in vain and without hope neither reason nor life resist; they languish, grow mad and die like Ophelia.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும். ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்



# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[124-வது பக்கத் தொடர்ச்சி]

### (V) அப்பரும் குற்றிய லிகரமும்

பவணந்திமுனிவர் சார்பொலிக்கும் கலப்பொலிக்குமுள்ள பேதம் அறியாததால், குற்றியலிகரத்தின் தன்மையும் மரபும் செவ்வனே யுணர்ந்ததாக அவர் நன்னூல் காட்டவில்லை. அதில், குற்றிய லிகரத்தைப் பற்றிய சூத்திரம் ஒன்றேயாம். அதாவது:—

"யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமுங் குறிய"
(நன்னூல் எழு - 93)

என்பதில் முப்பத்தேழுவகைக் குற்றியலிகரங்களைக் குறிக்கின்றார். அவைபாவன, நெடில், ஆய்தம், உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்களும், மூவின மெய்த் தொடர்க் குற்றியலுகரங்களும் ஆக ஆறு எழுத்துக்களால் ஆன அறுவகைக் குற்றியலுகரங்கள் முப்பத்தாறும், யவ்வரின் "இ" ஆம். ஆதலால், அவையும், அசைச்சொல்லாகிய "மியா" என்பதின் இகரமும் என்றார். ஆயினும் "மியா" என்னும் அசைச்சொல், எங்கு வந்தாலும், அதனில் உள்ள இகரம் குற்றிய லிகரம் என்று கொள்ளலாகாது. "மியான் ஜான்" என்னும் பதத்தில் இகரம் குற்றியலிகரமன்று:—

"குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே"
(தொல் - மொழி மரபு 1)

இந்தச் சூத்திரத்தின் முக்கிய பாகமாகிய "உரையசைக் கிளவிக்காவயின்" என்பதைப் பவணந்தி முனிவர் கவனிக்கவில்லைபோல் காணப்படுகின்றது. "தான் கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர்முகமாக்குஞ் சொல்லிற்குப் பொருந்தவரும் அம் மியாவென்னு மிடைச்சொல்லைச் சொல்லுமிடத்து, யாவென்னும் உறுப்பின் மேலதாய் முதலாய் நின்ற மகரவொற்றினையேறிக் குற்றியலிகரம் நிற்றலை விரும்பும். (ஆசிரியன்)" என்பது பொருளென்பர் நச்சினார்க்கினியர். இதற்கு உதாரணங்களாக, கேண்மியா, செல்மியா என்னும் தொடர்மொழிகளைக் காட்டுகின்றார். "கேண்மியா" என்பது தமிழ்நாட்டு வழக்கத்திலிருந்து மறைந்துவிட்டபோதிலும், பர்மன் பாஷையில் இதைக் காணலாம். "கேமியா" என்பது "கேளய்யா" என்பது போன்றதொரு மொழி. மலையாள தேசத்தில் "கேட்டோ?" என்று கூறுவதற்கு ஒப்பாகும்.

எனவே 'மியா' என்பது இடைச் சொல்லாய் ஒரு மொழியிடையில் வருமாகின், இகரத்தை மாத்திரையளவு குறுக்கி மொழிதல் மரபென்று தொல்காப்பியனார் கூறுகின்றார். ஆயினும் "மியா" தனிச்சொல் அசையாயின், குற்றியலிகரம் பெறாது என்பதைப் பவணந்தி சூத்திரம் குறிக்கவில்லை. மற்றும் தமிழ்மொழியானது இசைவடிவான மொழியாதலால், குற்றியலிகரம் பெரும்பாலும் இசைக்காகவே நிரியுமென்பதையும் பவணந்தி காட்டவில்லை. தொல்காப்பியனார் நூன் மரபில்,

"அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலு
முளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார் புலவர்"
(எழுத் - 33)

என்றும்,

"மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்"
(செய் - 2)

"எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப"

என்றுங் கூறினர். ஆதலால் குற்றியலிகரம் வருவது இசையின் கலையை உயர்த்துமென்பது திண்ணம். ஆகையால் குற்றியலிகரத்தை நம் ஆளுடைய அரசு எவ்வாறு பயன்படுத்துகின்றாரென்பதை அவர் பதிகங்களுள் ஆராய்வோம்:—

விடகிலே னடிநாயேன்
வேண்டியக்கா லியாதொன்றும்
இடகிலே னமணர்கட
மறவுரைகேட் டலமந்தேன்
தொடர்கின்றே னுன்னுடைய
தூமலர்ச்சே வடிகாண்பான்
அடைகின்றே னையாறர்க்
காளாய்நா னுய்ந்தேனே.
திருவையாறு பண் - பழந்தக்கராகம் 1.

இங்கு "லி" என்பதிலுள்ள இகரம் குற்றிய லிகரமென்பது இசையில் நன்கு விளங்கும். கால்+யாது காலியாது என்பதற்கு நன்னூல் விதி

"தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரம்
துன்னு மென்று துணிநரு முளரே"
(நன் - மெய்யீற்றுப் புண - 3)

என்பது. மெய்யின்முன் மெய்வரின் உண்டாகும் மாறுபாடுகளுக்குக் காரணம் யாவை எனப் பவணந்தி முனிவர் விளக்க எத்தனித்திலர். இவ்விதிக்கும்

"உயிர்வரின் உக்குறண் மெய்விட் டோடும்
யவ்வரி னிய்யா முற்றுமற் றொரோவழி"
(நன் 164)

என்னும் சூத்திரத்தில் "யவ்வரி னிய்யாம்" "என்பதற்கும் அடிப்படையில் யாதேனும் பேதமுண்டோ என்று நோக்கின் இல்லையென்றே கொள்ளல் வேண்டும். குற்றுகரம், அரைமாத்திரை அளவையேகொண்டு மெய்யெழுத்தின் தன்மையே பெரும்பாலும் இசையிற் பெறுவதாலும், யகரமெய்யின் உச்சரிப்பையே சற்று வலிதாய் இகரத்தின் உயிருச்சரிப்புப் பெற்று எழுவதாலும் யகரம் ஒழிந்த ஏனைய நிலைமொழி யீற்றின் முன்னர், யகரமெய் வருமொழியில் வருமாயின், இகரந் தோன்றும். ஆயினும் நிலைமொழி யீற்றுமெய்யின்முன் தனிக்குறிலமையப்பெறின், இகரந்தோன்றுவது இல்லை. அவ்வாறு தோன்றவேண்டுமெனின், அம்மெய்யிரட்டிய பின்னரே தோன்றும் (உதாரணம் மண்+யாது=மண்ணியாது). எனவே தன்னொழி மெய்ம்முன் யவ்வரின், இகரம் துன்னவேண்டிய இடங்கள் யாவை, வேண்டா இடங்கள் யாவை,

அவ்வாறு துன்னுவதற்குக் காரணம் யாது, துன்னும் 'இகரம்' சாதாரண இகரமா அல்லது குற்றியலிகரமா வென்பனவற்றைப் பவணந்தி முனிவர் விளக்காமல் விட்டனர். "துணிநரும் உளரே" என்றதால் அது தன் சம்மதமென்றுகூறவில்லை; சிலர் அவ்வாறுகொள்வாரென்றார். நமது சமயகுரவரான ஆளுடைய வரசும் அங்ஙனம் கொண்டார் என்பது மேற்கண்ட தேவார மேற்கோளால் தெரியவருகின்றது. அவ்வாறு கொள்ளுதல் இசைக்குப் பொருந்தாது என்று உணர்ந்தவிடத்து நமது சமயகுரவர்காலத்துப் புலவர்கள், அவ்வகைச் சந்தியில் 'இ'கரத்தை வருவிக்க உடன்படவில்லை.

> வாது செய்து மயங்கு மனிதராய்
> ஏது சொல்லுவீ ராகிலு மேழைகாள்
> யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
> மாதே வன்னலாற் றேவர்மற் றில்லையே"
>
> ஆதிபுராணத் திருக்குறுந்தொகை 4.

இங்கு இசையிலும் பொருளிலும் "ஏழைகாள்" என்பதற்குப்பின்னர்ச் சந்தியில் 'இ'கரம் வருதல் பொருந்தாமையால் இயல்பாய்விடப்பட்டதுகாண்க.

"கான்யாறடைகரை யூரினிது" என்னும் செய்யுட் டொடர்மொழியில் "இகரம் சந்தியிற் றோன்றுமாயின் தளையைக் கெடுத்து இசையையும் கெடுக்குமாதலால், "கானியா"றென அங்குக்கொள்ளப்படவில்லை. ஆதலால், தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரம் துன்னுவது இசைக்கே பொருந்துவதாகு மென்க. அவ்வாறு துன்னிய இகரத்தின் மாத்திரை எக்காலத்திலும் அரை மாத்திரையேயாம். தொல்காப்பியனார் மொழிமரபில் மாத்திரைச் சுருக்கம் கூறிய

> "ஓரள பாகும் மிடனுமா ருண்டே
> தேறுங் காலை மொழிவயி னான"

என்னுஞ் சூத்திரத்தின் பின்னர்—

> "இகார யகர மிறுதிவிரவும்"
>
> (மொழி மரபு சூத் - 58)

என்னும் சூத்திரம் கூறுகின்றார். இதற்கு நச்சினார்க்கினியர் "இகரமும், யகரமும் ஒரு மொழி இறுதிக்கண் ஓசை விரவி வரும் (உ - ம். நாய், நா இ என வரும்). அவ்விகாரங் கொள்ளற்க என்றவாறு" என்பர். எனவே யகர மெய்யிற்கு 'இகர வுயிரின்' ஓசை உண்டாதலால், குற்றியலுகரத்தைமாத்திரமன்றிமுற்றிய லுகரத்தையுஞ் சிறுபான்மை இடங்களில் இகரமாக்க வருமொழிமுதல் யகரமெய்க்குச் சக்தி யுண்டென்று அனுமானிக்கலாம்.

மற்றும், யகரம் வரத் திரியும் குற்றியலுகரத்தாலுண்டாம் குற்றியலிகரமும், நிலைமொழி யகர மெய்யால் சந்தியில் ஏற்படும் இகரமும் உச்சரிப்பில் சார்ந்துவரினல்லது தமக்கு இயல்பான ஒலியின்மையால் மாத்திரைக் குறுக்கத்தை உணர்க. உகரம் சிற்சில சமயம் அரை மாத்திரைக்கும் (குற்றியலுகர அளவுக்கும்) குறுகுவது முண்டென்பார் தொல்காப்பியனார்.

> "இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே
> கடப்பா டறிந்த புணரிய லான"
>
> (மொழிமரபு - 4)

என்பதற்கு நச்சினார்க்கினியர் "உதாரணம்; செக்குக்கணை சுக்குக் கோடு, என வரும். இவை அரை மாத்திரையிற் குறுகியவாறு ஏனையவற்றோடு படித்து உணர்க" என்பார். குற்றிய லிகரமும், குற்றிய லுகரம் போல் தனக்கியல்பான மாத்திரை யளவுக்குக் குறுகுவது * முண்டு:—

> மாதி யன்றும னைக்கிரு வென்றக்கால்
> நீதி தான்சொல நீயெனக் காரெனுஞ்
> சோதி யார்தரு தோணி புரவர்க்குத்
> தாதி யாவனு னென்னுமென் னையலே
>
> திருத்தோணிபுரம் - திருக்குறுந்தொகை 1.

கீழ்வரும் வன்றொண்டர் திருப்பாசுரத்திலும் குற்றியலிகரம் அரைமாத்திரைக்கும் குறையவில்லையா வென்பதை அறிஞர் ஆராய்க:—

> செறிவுண் டேன்மனத் தாற்றெளி வுண்டேற்
> றேற்றத் தால்வருஞ் சிக்கன வுண்டேல்
> மறிவுண் டேன்மறு மைப்பிறப் புண்டேல்
> வாணுண் மேற்செல்லும் வஞ்சனை யுண்டேல்
> பொறிவண் டியாழ்செய்யும் பொன்மலர்க் கொன்றை
> பொன்போ லுஞ்சடை மேற்புனைந் தானை
> அறிவுண் டேயுட லத்துயி ருண்டே
> யாரூ ரானை மறக்கலு மாமே.
>
> திருவாரூர்-பண் - தக்கேசி 5.

"டியாழ்செய்யும்" என்னும் சீரானது கூவிளச்சீர் வரவேண்டிய விடத்திலிருப்பதால் இசையில் அது நான்குமாத்திரையே யாகும். 'டியாழ்' என்னும் அசைக்கு மொத்தமாத்திரை யிரண்டேயாம். எனவே இக் குற்றியலிகரம் மாத்திரையளவு குன்றியதென அநுமானிக்கலாம்.

இசையின் சூக்குமத்தையும், குற்றியலிகர விலக்கணவமைதியையும் நன்குணர்ந்ததிருநாவுக்கரசு, எவ்வெவ்விடங்களில் குற்றியலிகரத்தைப் பயன்படுத்துகிறாரோ, அவ்விடங்களெல்லாம் யாழில் இசை மிக்க இனிமைபெறவேண்டுமென்றே யன்றி அவர் இலக்கணத் தேர்ச்சியை ஆடம்பரமான விளக்கஞ் செய்வதற்கன்று.

---

* இதன் விதி

> " புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே
> யுணரக் கூறின் முன்னர் தோன்றும் "
>
> (தொல் - மொழி மரபு 2)


ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0




# தமிழ்ப் பாடம் 58.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[131-வது பக்கத் தொடர்ச்சி]

**த**மயந்தியின்சொற்கிணங்கி அந்தணன் நளனைத் தேடிச்சென்றதும், சென்று அயோத்திமாநகரில் வாகுகனாயிருந்த அவனைச் சந்தித்ததும், தானுரைத்ததற்கு அவன் எதிர் உரைத்த மொழிகளும், அதனைக் கேட்டு இவன் மீண்டுவந்ததும், இனிவரும் நான்கு செய்யுள்களில் அடங்கி யிருக்கின்றன.

> மின்னாடு மால்வரையும் வேலையும் வேலைசூழ்
> நன்னாடுங் கானகமு நாடினான்—மன்னு
> கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
> அடைந்தா னயோத்தி நகர். 31.

பொழிப்புரை:—பொருந்திய மதநீர் பொழிகின்ற மயக்கமுடைய யானைப்படையுடைய நளவேந்தனைத் தேடிச்சென்ற அவ்வந்தணன், மின்னல் வீசுகின்ற மேகங்கள் தங்கிய மலையும் கடலும் கடல்சூழ்ந்த நல்ல நாடுகளும் காடுகளும் நாடிச்சென்று கடைசியில் அயோத்திநகரைச் சேர்ந்தான்.

---

> கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
> போனதுவும் வேந்தர்க்குப் போதுமோ—தானென்று
> சாற்றினா னந்தவுரை தார்வேந்தன் றன்செவியில்
> ஏற்றினான் வந்தா னெதிர். 32.

பதப்பிரிவு:—கான் அகத்து காதலியை கார் இருளில் கை விட்டுபோனதுவும் வேந்தர்க்கு போதுமோ தான் என்று சாற்றினான் அந்த உரை தேர் வேந்தன் தன் செவியில் ஏற்றினான் வந்தான் எதிர்.

பதவுரை.

"கானகத்து - காட்டிலே
காதலியை - மனைவியை
கார் - கரிய
இருளில் - இருட்டில்
கைவிட்டு - கைவிட்டுவிட்டு
போனதுவும் - போனது
வேந்தர்க்கு - அரசராயிருப்பவர்க்கு
போதுமோ - அழகோ"
என்று - என்று
சாற்றினான் -(அந்தணன் போய் அயோத்தியில்) கூறினான்,
அந்த - அந்த
உரை - வார்த்தைகளை
தார் - மாலையணிந்த
வேந்தன் - நளன்
தன் - தன்னுடைய
செவியில் - காதில்
ஏற்றினான் - ஏற்றுக் கொண்டான். (உடனே)
எதிர் - எதிர்
வந்தான் - வந்தான்.

விரிவுரை:—சற்றேறக்குறைய, தமயந்தி சொல்லியனுப்பிய வாசகமும், அந்தணன் உரைத்த வாசகமும் பொருளளவில் ஒன்றேயாயினும், இப்பின்னது உரைக்கின்ற தொனியில் சிறிது வேறுபடுகின்றது. தனது அரசனுடைய மகளிடத்தில் இவ் வந்தணனுக்கு இருந்த அன்பு அதிகம். அவள் அடைந்துள நிலைக்கு அவன் பெரிதும் இரங்குவதும், அவளை அந்நிலைக்குக் கொணர்ந்த நளன்பால் அவனுக்குச் சிறிது மனச்சலிப்பு இருப்பதும் இயற்கையே. முன் தமயந்தியின் அன்னையும், "பனி இருளில் பாழ் மண்டபத்திலே உன்னை நினையாது நீத்து அகன்றபோது, தனியே நின்று என் நினைத்தாய் என் செய்தாய்?" என்று இரங்கியபோது, "நளன்" அல்லது, "உன் நாயகன்" என்று குறித்துரைக்க இசையாத காரணத்தால் அவள் மனத்தில் இருந்த சலிப்புத் தோன்றிய வகையைக் காட்டி யுள்ளேன். அந்த இடத்தில், சொல்லாது விட்ட வார்த்தையால் தாயின் சலிப்புத் தெரியலாயிற்று. இங்கு இப் புரோகிதன் சொல்கின்ற குரலால் அது தெரிகின்றது. "துணிவன்றோ" என்றாள் தமயந்தி; புரோகிதனோ, "போதுமோதான்" என்பான். "துணிவன்றோ" என்றதில் வசையேதும் இல்லாமல், தன்னை விட்டுச்சென்ற நளனுடைய மனது பட்டிருக்கும் அவத்தையை மாத்திரம் கருதுகின்ற தொனி அடங்கியுளது. இதற்கு மாறாக இப் பார்ப்பான் "போதுமோதான்" என்றுரைத்ததில், "இது தகவோ, தர்மமோ, அழகோ!" என்று இடித்துரைக்குங் கருத்தைக் காணலாம்.

---

> ஒண்டொடி தன்னை யுறக்கத்தே நீத்ததூஉம்
> பண்டை விதியின் பயனேகாண்—தண்டரளப்
> பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்
> வனத்தே நீத்தானென் றையுறே னீ. 33.

பதப்பிரிவு:—ஒள் தொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும் பண்டை விதியின் பயனே காண் தண் தரளம் பூ தாமம் வெள் குடையான் பொன் மகளை வெம் வனத்தே நீத்தான் என்று ஐ உறேல் நீ.

பதவுரை.

"ஒள் - ஒளி பொருந்திய
தொடிதன்னை - வளையல்களை அணிந்த ஒருத்தியை
உறக்கத்தில் - தூங்கிக்கொண்டிருக்கும்போது
நீத்ததும் - விட்டுவிட்டுப் போனதும்
பண்டை - பழைய
விதியின் - விதியினுடைய
பயனேகாண் - பயனே யன்றி வேறன்று.
தண் - குளிர்ச்சியுடைய
தரளம் - முத்துக்களையும்
பூ - பூவினாலாகிய
தாமம் - மாலையையும் (கட்டிய)
வெள் - வெண்மையாகிய
குடையான் - குடையையுடைய வேந்தனது
பொன் - அழகிய
மகளை - மகளை
வெம் - கொடிய
வனத்து - காட்டில்
நீத்தான் - (அவள்நாயகன்தான் தீயோனாகிக்) கைவிட்டான்

என்று - என்று
நீ - நீ
ஐயுறேல் - சந்தேகப்படாதே.
(என்று நளன் அவ்வந்தணனுக்குப் பதில்
கூறினன்)

**விரிவுரை:**—இதனால் நளன் தன்னை வேறொருவனாக வைத்து அவ்வந்தணனுக்குச் சமாதானம் கூறுகின்றான். "ஐயோ நீ, பாவியொருவன் தன் காதலியைக் கைவிட்டுப்போனான் என்று பழிகூறி வருகின்றாயே. போனவன் பாவனாயிருந்தாலும் அவன் தன்னுடைய மனமொப்ப அம்மனைவியைவெறுத்துச் சென்றிருப்பான் என்று ஒருபோதும் எண்ணாதே. இவையெலாம் அவர்தம் முன்னை விதியின் காரியமாயிருத்தல் வேண்டும்" என்பது நளனது கருத்து. இது பொதுவாக யாரும் சொல்லக்கூடிய வார்த்தை. கருத்தளவில், இந்தப் பதில் சொன்னவனது உருவம் எதுவாயிருந்தாலும் அவன் நளனாகத்தான் இருக்க வேண்டும் என்னும் நிச்சயம் ஏற்படாதானாலும் அந்தப் பதிலிலுள்ள சொற்களை ஆராய்ந்தால் நளனே அவன் என்று எளிதில் துணியலாம்.

கைவிட்டுப் போனதாகிய நிகழ்ச்சிக்கு, தமயந்தி அந்தணன் வாருகன் ஆகிய மூவரும் அடையாளம் சொல்கின்றனர். இம்மூன்றிலும் ஒன்றற்கொன்று சிறிது பேதமுண்டு. தமயந்தி, கார் இருளில் பாழ் மண்டபத்தில் சோர்துயிலில் நீத்தான், என்றாள். அந்தணனுக்கும் நடந்ததெல்லாம் தெரியுமாதலால் அவன், மண்டபத்தை விட்டுவிட்டு, கானகத்தை எடுத்துக்கொண்டு, கானகத்தில் கார் இருளில் நீத்தான், என்றான். தமயந்தி சொல்லியனுப்பியபடி 'சோர் துயிலில்' நீத்த அடையாளத்தை இவ்வந்தணன் சொல்லவே இல்லை. அவ்வாறிருக்கப் பட்சத்தில் பதிலுரைத்த அவ் வாருகன் நளனல்லாவிட்டால், "உறக்கத்தே" என்று எவ்வாறு சொல்லியிருக்க இயலும்? நித்திரையில் நீத்தசெய்தி நளனுக்கே தெரிந்திருக்கக்கூடும். "எங்களப்பன் குதிருக்குள் இல்லை" என்பதுபோல் அவனை அறியாமலே அது வாயில் வந்துவிட்டது.

**குறிப்பு:**—நீத்ததூஉம், என்ற சொல்லில், தூ என்ற உயிர்மெய்யெழுத்திலுள்ள **ஊ** என்னும் உயிர்நெடில் அளபெடுத்திருக்கின்றது என்பதற்கு அறிகுறியாக அதன் குறிலாகிய உ என்னும் எழுத்துப் பக்கத்தில் வந்திருக்கின்றது. ஆகையால் தூ என்பதை மூன்று மாத்திரையளவு நீட்டி உச்சரிக்கவேண்டும். உ என்ற எழுத்திற்குத் தனியாய் உச்சரிப்பு இல்லை. இது உயிரளபெடை.

---

அம்மொழிகேட் டந்தணனு மையுற் றுருநோக்கி
விம்மு கருங்குழலை மீண்டடைந்தான்-தெம்மன்னர்
ஊன்றோய் வடிவேல் விதர்ப்பன்ற னொண்ணகர்க்கே
வான்றோய்பொற் கோயிலிடை வந்து. 34.

**கருத்து:**—வாருகன் கூறிய அவ்வார்த்தைகளைக் கேட்ட அந்தணன் அவனது உருவத்தை நோக்குங்கால் "இவன் நளனாயிருக்கவுங் கூடுமோ" என்ற சந்தேகத்தை யுடையவனாய்த் திரும்பி விதர்ப்பநாடு வந்து தமயந்தியினுடைய மாளிகையைச் சேர்ந்தான்.

## இலக்கணம்.

சென்றவாரம், சில எழுத்துக்கள் தம்முடைய மாத்திரையினின்று குறுகி ஒலிக்கும் என்பதைப் பற்றிச் சொல்லி, ஐகாரம் தன்னைக் குறிக்கும்போது பெறுவதாகிய இரண்டு மாத்திரையைச் சொற்களில் சேர்ந்து வரும்போது பெறுவதின்றி, முதலிலாயின் ஒன்றரை மாத்திரையும், இடையிலும் கடையிலும் ஒரு மாத்திரையும் பெறுவதாகின்றதையும், அவ்வாறே ஔகாரம் மொழிக்கு முதலில் நின்று ஒன்றரை மாத்திரை பெறுவதையும் கண்டோம். ஔகாரம் மொழிக்கு இடையிலும் கடையிலும் வருவதில்லையாகையால் இது ஐகாரத்தைப்போல் ஒரு மாத்திரைக்குக் குறுக இடமில்லை. இனி உகர இகரங்கள் தமக்கு இயற்கையாயுள்ள ஒரு மாத்திரையிலும் குறுகி ஒலிக்க நேர்வதைப் பார்ப்போம். அவ்வாறு உ என்னும் உயிர் எழுத்துக் குறுகி ஒலிக்கும்போது அதற்குக் **குற்றியலுகரம்** என்று பெயர். குறுகிய தன்மையையுடைய உகரம் என்பது அப்பெயரிற்கு அர்த்தம்.

உகரம் வார்த்தைக்கு முதலிலும் இடையிலும் கடையிலும் ஆகிய மூவிடத்திலும் வரலாம். முதலில் வரும்போது அது குறுகாது. உரம், என்ற வார்த்தையையும் அரம் என்ற வார்த்தையையும் உச்சரித்துப் பாருங்கள். அரம் என்பதன் முதலிலுள்ள அகரத்திற்கு எவ்வளவு மாத்திரை உச்சரிப்பு இருக்கின்றதோ அவ்வளவு உச்சரிப்பு உரம் என்பதின் முதலிலுள்ள உகரத்திற்கும் இருப்பதை உங்கள் காது அளந்துகொள்ளும். தனி உயிராயில்லாமல் மெய்யெழுத்தோடு சேர்ந்த உயிர்மெய்யெழுத்து, வார்த்தைக்கு முதலெழுத்தாக இருந்தாலும் அதனிலுள்ள உகரமும்(நுந்தை என்கிற ஒரே ஒரு வார்த்தையில் தவிர) குறுகாது. குதிரை, முதலை நுதல் என்பனபோன்ற சொற்களின் முதலிலுள்ள உயிர்மெய்யெழுத்தினது உகரமும் குறுகாமல் தன் ஒரு மாத்திரையைப் பெற்று ஒலிப்பதைத் தேர்ந்து கொள்ளுங்கள். இடையிலே வருகின்ற உகரங்களும் குறுகா. உயிரெழுத்து வார்த்தைக்கு நடுவே வாராதாகையால் உயிர்மெய்யிலுள்ள உகரத்தைத்தான் இங்கே நினைத்துக்கொள்ளவேண்டும். கடுமை பதுமை, கருடன், கழுதை, என்பனபோன்ற சொற்களில் உகரம் மெய்யோடு சேர்ந்து சொல்லுக்கு நடுவே வரலாகின்றது. உயிரினுடைய மாத்திரையையே அது சேர்ந்ததா லான உயிர்மெய் எழுத்துக்கள் பெறும் என்று முன்னே சொல்லியிருகின்றேன். அதன்படி டு, து, ரு, ழு, என்னும் உயிர்மெய்யெழுத்துக்கள் ஒவ்வொரு மாத்திரைகொண்டு ஒலிப்பதை இங்கு உணர்வீர்.

எனின், உகரம் குறுகிஒலிக்கவேண்டுமானால் அது மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் குறுகக் கூடும். மொழிக்கு இறுதியில் வரும்போதுதான் குறுகக்கூடும் என்றதால், அப்படி இறுதியில் வரும்போதெல்லாம் குறுகிவிடும் என்ற அர்த்தம் இல்லை. சிற்சில சமயங்களிற்றான் குறுகும். ஆதலால் அப்படிக் குறுகுவது எப்பொழுது என்று இனிப் பார்ப்போம்.

---



# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

4-ம் பத்து, 6-ம் தசகம்.

[129-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பாசுரம்.

இவளைப் பெறும்பரி சிவ்வணங்
காடுதலன் றந்தோ
குவளைத் தடங்கண்ணும் கோவைச்
செவ்வாயும் பயந்தனள்
கவளக் கடாக்களி றட்ட
பிரான்திரு நாமத்தாற்
றவளப் பொடிகொண்டு நீரிட்
டிடுமின் தணியுமே.

**பதக் குறிப்புக்கள்:**—பரிசு - தக்க உபாயம், பயந்தனள்-கண்களும் வாயும் விவர்ணத்தை யடைந்தனள். கவளக்கடாக்களிறு - யதேச்சையாய்த் தழைகளையும் பழங்களையும் அரிசிசோறு கரும்பு இவைகளையும்தன் வயிற்றிற்கேற்ப நிறைய உண்டிருக்கும் ஆண் யானை. கம்ஸன் கிருஷ்ணபகவானைக் கொல்ல வளர்த்த குவலயாபீடம் என்ற யானையைக் குறிக்கின்றது. அட்ட - அதன் தந்தங்களையே கொண்டு அடித்துக் கொன்ற, தவளப்பொடி - அடியார்கள் பாத தூளியை, இட்டிடுமின் - போடுங்கோள்.

**உரை:**—அல்பதேவதைகள் ஆவேசத்தால் நீங்கள் ஆட்டுகின்ற இது இவளைக் காத்தளிக்காது. இவளோ குவளைபோன்ற தடங்கண்களும் கோவைபோன்ற செவ்வாயும் பயப்பேறி அழகை இழந்திருக்கின்றாள். ஆனபின்பு குவலயாபீடத்தைக் கொன்ற கிருஷ்ணபிரான் திருநாமத்தைச்சொல்லிப் பரிசுத்தமான அவனடியார் பாததூளியைக்கொண்டு இவள்மேல் இடுங்கோள்; இட்டீர்களாகில் இவள் நோய் இவளை விட்டகலும்.

---

6-ம் பாசுரம்.

தணியும் போழ்தில்லை நீரணங் காடுதி ரன்னைமீர்
பிணியும் ஒழிகின்ற தில்லை பெருகுமிது வல்லான்
மணியி லணிநிற மாயோன் தமரடி நீறுகொண்
டணியமுயலின் மற்றில்லை கண்டீரிவ் வணங்குக்கே.

மேற்செப்பிய தவளப்பொடி இன்னதென்று இப்பாசுரம் விவகரிக்கின்றது. யாம் முன் பாசுரத்திலேயே இன்னதென்று உரையிட்டுள்ளோம்.

**உரை:**—நீர் அணங்காடுவதால்இவளுக்குச்சுகம்லவலேசமும் காண்கின்றிலோம்;இது மாத்திரமுமன்றிப் பிணியும் வளர்ந்துவரவே காண்கின்றோம். ஆகையால் நீல இரத்தினத்தைக் காட்டிலும் அதிக சோபையையுடைய ஆச்சரியபூதனாய கிருஷ்ணபகவானது தாஸபூதர்களாகிய அடியார்கள் தம்திருப்பாதநீறுகொண்டு இவளை யலங்கரிக்க முயன்றாலல்லது வேறே பரிஹாரமில்லை. இத் தெய்வப்பெண்ணை வியாதியினின்றும் நிவர்த்திக்க வேறு உபாயமில்லை.

---

7-ம் பாசுரம்.

அணங்குக் கருமருந்தென் றங்கோ
ராடும் கள்ளும்பராய்ச்
சுணங்கை யெறிந்து நுந்தோள்
குலைக்கப் படுமன்னைமீர்
உணங்கல் கெடக்கழுதை யுதடாட்
டங்கண் டென்பயன்
வணங்கீர் கள்மாய பிரான்தமர்
வேதம்வல் லாரையே.

**பதக் குறிப்புக்கள்:**—ஆடும்-ஆட்டிறைச்சியையும் - பராய்-நாலா பக்கங்களிலும் பலியாக விட்டெறிந்து- சுணங்கை - தேகத்தின் உரோமங்கள் புளகாங்கிதமாகுகை. எறிந்து - ஆவேசத்தால் வெளிப்பட்டு நிற்கும்படியாடி (அல்லது சுணங்கை-கைகளைக் கொட்டியாடும் ஓர் கூத்து) உணங்கல்-வேவித்த நெலைப் புழுங்கலரிசி செய்வதற்கு வெய்யலில் உலர்த்த அதனைக் கழுதை தின்றால் வாளாவிருக்க வொண்ணாது என்பது தாத்பரியம்.

**உரை:**—இப்பிராட்டியோ தளரா நிற்க அங்கோர் இறைச்சியும் கள்ளும்தூவிச் சில சடங்குகளை யாட்டக்காரன் இஷ்டப்படி நடத்துதல், கழுதை புழுங்கலை மேயக்கண்டு வாளாவிருப்பதுபோல், வஸ்துநாசத்திற்கே இடமாகும். ஆகையால் இவள் நோயெல்லாம் தீரும்படி வேத வித்துக்களான ஸ்ரீ வைணவர்களிடத்தில் சென்று ஆச்ரயிங்கோள்.

---

8-ம் பாசுரம்.

வேதம் வல்லாரைக் கொண்டு
விண்ணோர்பெரு மான்திருப்
பாதம் பணிந்து இவனை
யிதுதீர்த்துக் கொள்ளாதுபோய்
ஏதம் பறைந்தல்ல செய்து
கள்ளோடு கலாய்த்தூய்க்
கீத முழவிட்டு நீரணங்
காடுதல் கீழ்மையே.

**பதக் குறிப்புக்கள்:**—ஏதம்-கெடுதல், பறைந்து-சொல்லி, கீத முழவு - வாத்தியங்களோடு பாடிச் சப்தங்கள் செய்யும் உற்சாகம். கீழ்மையே - உங்களுக்கும் அநாகரிகம்.

**உரை:**—ஸ்ரீ வைணவர்களை ஆச்ரயிப்பதால் அவர்களைப் புருஷகாரமாக்கி அவர்களை முன்னிட்டுப் பகவானை அடுத்தலாகும். இவைகளைச்செய்து இவள்நோயிது வென்று அறிந்து தீர்த்துக்கொள்ளாதுபோக அற்பமான செய்யத்தகாதபிரவர்த்திகளில் இசைந்து கள்ளும் இறைச்சியும் தூவி வாத்திய கோஷத்துடன் நீர் அணங்காடுவது உங்களுக்குக் குறையே.

---

9-ம் பாசுரம்.

கீழ்மையி னுலங்கோர் கீழ்மக னிட்ட முழவின்கீழ்
நாழ்மைபலசொல்லி நீரணங்காடும் பொய்காண்கிலே
னேழ்மை பிறப்புக்கும் சேமமிந் நோய்க்கு மீதேமருந்
தாழ்மையில் கண்ணபிரான்கழல் வாழ்த்துமி
[னுன்னித்தே

**பதக் குறிப்புக்கள்:**—நாழ்மை-பெருமை, உத்கிருஷ்டம். இவ்வடியில் பின்னர்ப் "பொய்" என்பதால் உசிதமில்லாத தோத்திரமென்று பொருள்கொள்ள வேண்டும். சேமம் இந்நோய் - இவ்வாழ்வாருக்குற்ற நோய் பகவத் பக்தி மீறி விரஹமானதால் இவ்விரஹ

நோய் உற்றவருக்கு எழுபிறப்புக்கும் க்ஷேமம், அதாவது நல்லதையே பயக்குமென்கின்றார். ஊழ்மையில்-நியாயமான பிராப்தம். பகவானுக்கடிமையாவது சுவரூபத்துக்கு உசிதமானதும் தக்கதும் ஆகும். உன்னித்து - நன்றாக அலோசித்து.

**பொழிப்புரை :**—கீழ்மையினால் அங்கோர் கீழ்மகன் இட்ட முழவின்கீழ் நன்மை பல சொல்லி நீரணங்காடுமிந்த வீண் முயற்சியினாலொரு பிரயோஜனமும் காண்கிலேன். இனி மெய்யாகப் பார்க்கில், எக்காலைத்துக்கும் இதுவே ரக்ஷையாகும். இதுவே எந்நோய்க்கும் அருமருந்து; இதை நீங்கள் செவ்வனே நிரூபித்துச் செய்யுங்கோள். அதுதான் என்னெனில் கண்ணபிரான் கழல்களை வாழ்த்துமின் என்கிறார்—ஆறுயிரப்படி.

---

### 10-ம் பாசுரம்.

உன்னித்து மற்றொரு தெய்வந்
தொழாளவனை யல்லால்
நும்மிச்சை சொல்லி நுந்தோள்
குலைக்கப்படு மன்னைமீர்
மன்னப் படுமறை வாணனை
வண்டுவ ராவதி
மன்னனை யேத்துமின் யேத்துத
லுந்தொழு தாடுமே.

**பதக்குறிப்புக்கள்:**—உன்னித்து - தன் மனப்பூர்வமாய். நும் இச்சை சொல்லி-உங்கள் வாய்க்கு வந்ததெல்லாம் உங்களிஷ்டம்போல் சொல்லி, குலைக்கப்படும் அன்னைமீர் - உடல் குலைந்து வெறியாட்டமாடி வருந்தும் அன்னைமார்களே, மன்னப்படும் - (வேதத்தில் ஓதி) அப்பியஸிக்கப்படுகின்ற, மறைவாணனை - வேதமே அவன் கீர்த்தியை உத்கோஷிக்கும் பெருமானை, வண் - அழகான, துவாரவதி - துவாரகா நகரத்துக்கு, மன்னனை - பிரபுவை, ஏத்துமின் - துதி செய்யுங்கோள். ஏத்துதலும் - ஏத்தினால், தொழுது ஆடும்-இவள் தானே எவருடைய வேண்டுகோளும் இன்றித் தொழுது உற்சாகத்தால் ஆடுவாள்.

**குறிப்பு:**—ஸ்ரீ கிருஷ்ணபகவானைத்தவிர வேறொரு தெய்வம் தொழாள், நினைக்கவுமாட்டாள். அவனைக் கொண்டேத்தினால் நிச்சயமாய் இவள் எழுந்திருந்து உற்சாகத்துடன் ஆடுவாள்; கண்டுகொள்ளலாம்.

---

### 11-ம் பாசுரம்.

தொழுதாடித் தூமணி வண்ணனுக்
காட்செய்து நோய்தீர்ந்த
வழுவாத தொல்புகழ் வண்குரு
கூர்ச்சட கோபன்சொல்
வழுவாத வாயிரத் துளிவை
பத்தும் வெறிகளையும்
தொழுதாடிப் பாட வல்லார்
துக்கசீல மிலர்களே.

**உரை:**-தொழுது-பகவானை நமஸ்காரம் பண்ணி, ஆடி - நர்த்தனம் செய்து, தூமணி வண்ணனுக்கு - பரிசுத்தமான அழகே வடிவெடுத்த கிருஷ்ண பகவானுக்கு, ஆட்செய்து - ஆட்பட்டு, நோய் தீர்ந்த - விரஹ நோயைத் தவிர்த்துக்கொண்ட, வழுவாத - தேவாந்தர பற்று யாதுமில்லாத, தொல்புகழ் வண்குருகூர்ச் சடகோபனால் சொல்லப்பட்ட வழுவாத ஆயிரத்துள், - பகவானது கீர்த்தி குணங்கள் ஒன்றும் குறையாத ஆயிரத்துள், இவை பத்தும் வெறிகளையும் - இப் பத்தும் மற்றச் சில்லரை தெய்வங்களாலுண்டான மயக்கத்தைத் தெளிவிக்கக் கூடிய பாடல்களை, தொழுது ஆடிப் பாடவல்லார்—தொழுது ஆடிப்பாட வல்லவர், துக்கசீலமிலரே-ஒரு நாளும் துக்கத்துக்கும், வேறு தெய்வத்தைத் தேடி ஆச்ரயிக்கும் வேதனைக்கும், சீலமிலரே மூட்டுவிக்கும் கர்மபந்தத்திற்கு ஆளாகமாட்டார்கள். சீலம் - பூர்வ பயனை அநுபவிக்கும்உரிமை.

**விசேஷக் குறிப்பு:**—தன் நாம ஸங்கீர்த்தனத்தாலும், ஸ்தோத்திரத்தாலும்தன் திருத்துழாய் அணிவதாலும் தன்னடியாரை அடுத்தலாலும் அவர்கள் பாததூளிகளை அணிவதாலும் தேவதாந்திரங்களை அடுக்காமல் தன்னையே அடுத்தலாலும் எம்பெருமான், அவனை விட்டுப்பிரிந்த விரஹதசையிலும் அவ்விரஹ வியாதிக்கு ஸித்தௌஷதமாயும் விரஹ சமயத்திலுண்டாகும் மோஹங்களை நிவர்த்திப்பிக்கும் அருமருந்தாயும் நின்று பக்தர்களை இரக்ஷிக்கிறானென்று இத்தசகத்தில் நம்மாழ்வார் வெளியிட்டருளுகிறார்.

---

# தேவகி

[133-வது பக்கத் தொடர்ச்சி]

இவ்வைபவத்தில் அன்று இரவு கழிந்தது. மறுநாள் பாடசாலை செல்ல அனுமதியில்லை. தையம்மாள் முயன்ற முயற்சி யெல்லாம் பயன்படாமற் போகவே அன்றுடன் நின்றது என் பள்ளிக்கூடவாழ்வு. பின் பகற்பொழுது கழியவேண்டாவோ? மனைக்கு உரிய வேலைகளில் ஈடுபட்டேன். இவ்வாறு நான் நாள் கடத்திவருங்காலத்தில், ஒருமாலை, இம் மனைத்தலைவி பொதுநலச்சேவை பேச வெளிச்சென்றாள். அவள் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அன்றையை வர்த்தமானப் பத்திகை வந்தது. அதை யெடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது பெரிய எழுத்துக்களில் பொறிக்கப் பெற்றிருந்த வோர் விளம்பரம் என் கண்ணைக் கவர்ந்தது.

"சித்தூர் ஜமீன்தார் ஓங்குபுகழ் இராஜாதி ராஜ இராஜமார்த்தாண்ட ஜெயரங்க பூபதியார் திருமகள் ஸௌபாக்கியவதி இந்திராணி தேவியார்க்கு நற்றுதியும் உவாத்தினியுமாய் அமைவதற்குரிய கல்விநலம் வாய்க்கப்பெற்ற நற்குலமாது ஒருத்தி தேவை. திறமைக்குத் தக்கபடி ஊதியம் தரப்படும். உண்டியும் உறைவிடமும் இலவசமாய் அளிக்கப்பெறும்"

என்று அவ் விளம்பரம் வரையப்பட்டிருந்தது. ஆர்வமுடன் இவ்விளம்பரத்தைப் படித்து நான், காண்பது கனவன்றெனத் தேர்ந்ததேன். தேர்ந்த நான் உற்ற மகிழ்ச்சியோ அளவிடற்பாலதன்று. விரும்பிய மகனை மணங்கொள்ள விருக்கும் கன்னியின் உள்ளக் களிப்பையும் இவ்விளம்பரம் என்பால் இயற்றிவைத்துள்ள மகிழ்ச்சி வென்றுவிடும். என் துயரெல்லாம் அகன்றதுபோல் தோன்றியது. எனினும் நீண்



டநேரம் அம்மகிழ்ச்சி நிலைக்கவில்லை. என் மாமனது இறுதிக் கட்டளையோ என் காதில் முடிவிலாதபடி தொனிக்கலாயது. அவன் மனைக்கிழத்தியின் கொடுமையோ ஒரு புறம் என்னை உழக்கியது. இருப்பதா இம்மனையைத் துறப்பதா என்று கேட்டுக்கேட்டுவாடினேன். என் மனவரங்கில் நிகழ்ந்தவொரு சமரில் என் மாமியின் கொடுமை, என் மாமனது கட்டளையை வென்றகற்ற, ஒரு முடிவும் எய்தலானேன். என் மனமும் குளிர்ந்தது. புது ஊக்கமொன்று என்னைப் பற்றியது. இழந்த சிறகைப்பெற்ற ஒரு பறவையென என் மனம் விண்ணின் விடுதலையை விரும்பி நோக்கிப் பறந்தது. எழுதுகோலை எடுத்தேன். கடிதமொன்றை எழுதினேன். எழுதியவக் கடிதத்தை எடுத்துக்கொண்டு தபால்நிலயம் சென்று அதைத் தபால்பெட்டிக்குள் சேர்த்துவிட்டு வீடு திரும்பிய நான் ஓரறையில் தனியமர்ந்தேன். நான் கடிதம் எழுதியதையும், வெளியே சென்றதையும், என்னிடம் குடிகொண்ட அமைதியையும் கண்ட தையம்மாள் என் செயலின் கருத்தறிய, என்னறை வந்தாள். வந்தவள் சற்று நேரம் சும்மாவிருந்து பின் அவளே என்னைப் பேசத் தூண்டினாள். அன்று சமையலில் பேச்சு துவக்கமாயது. எனது கைத்திறனை மிகவும் மெச்சினாள். பிறகு பத்திரிகையில் என்ன விசேஷம் என்று கேட்டாள். மாமனது கட்டளையை மீறுதல் முறையன்றென்றும், சீக்கிரத்தில் என் சிறியதகப்பன் வந்து என்னை ஏற்பாரென்றும், என் துயர் சீக்கிரத்தில் அகலுமென்றும், இரவு சாச்வதமன்றென்றும், இருள் கொல்லப்பருதியுண்டென்றும் கூறிஎன் உள்ளக்கிடக்கையை அறிய முயன்றாள். நான் ஒன்றிற்கும் நேரான பதில் கூறாமல், சுற்றுவதைக்கண்ட தையம்மாள், நீண்டநேரம் முயன்றும் பயனில்லாமற் போகவே, "தேவகி, என்னிடம் நீ மறைக்க முயல்கின்ற கருமத்தைத் தெரிவதற்குஇனி முயலமாட்டேன். நீ துணியும் கருமம் தூயதாய்த்தா னிருக்கவேண்டும். வஞ்சமே அறமாயுள்ள இவ்வுலகத்தின் அனுபவமில்லாச் சிறுமி நீ. நீஇடரொன்றும் உறாதிருக்கவேண்டுமெனும் அவாவே எனதுஇம் முயற்சிக்குக் காரணம். கடவுள் உன்னைக் காத்தளிக்க வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை; விதி புகுந்து வகுக்கும் நெறியின்முன் யாரே நிற்கவல்லார்" என்று கூறினாள். மேலொன்றும் என்னைக் கேட்கவில்லை. தையம்மாள்பெருமைக்கு யாரே இம்மாநிலத்தில்நிகராவர். அவள் மொழிந்த மொழி என் உள்ளத்தை உருக்கிவிட்டது. எழுந்து நான் தையம்மாளை இறுகப்புல்லி அவள் மடிமீது படுத்துக்கொண்டு குழவிபோல அழுதேன். காரியம்சித்தியாகுமுன் ஒன்றும்சொல்லவேண்டாவென்று இருந்தேனே யல்லாமல் அவளிடமிருந்து எதையும் மறைக்க நான் எண்ணவில்லை. தாயினும் பரிந்துபுரக்கும் அவள் மனம்வருந்துவாளோ என்ற எண்ணம் என்னைச்சுட்டது. அழுகையின் இடை, 'தாயே அனையாய், உனக்கும் தேவகி ஒன்றை மறைப்பளோ..........'' என்றேன். என்றதும் அப்பெருந்தகை, "என்னருமைக் குழந்தாய், வருந்தேல், நீ சொல்கின்றவரை காத்திருப்பேன். தீங்கின்வழியில்லாத எக்கருமத்திலும் நானுக்கு விலகாத் துணையாயிருப்பேன். விரகறியா என் செல்வமே, நீ தீங்கொன்றும் எய்தாதிருக்கவேண்டுமென்னும் விழைவினால் கேட்டேன். எனக்கு எல்லாம் ஒளியாமற் கூறுவாய் என்பதையும் அறிவேன்'' என்று அருமையுடன் தேற்றினாள். சிறிது மனந்தேறிய நான், 'நீ காலையில் காய்கறி வாங்கப்போகும் சமயம் தபால் நிலயம்சென்று எனக்குக்கடிதம் ஏவாவதுஇருந்தால் வாங்கி வருமாறு கேட்டுக்கொள்கின்றேன். பின்னர் உனக்கு எல்லாம் சொல்லுவேன்'' என்று நான் வேண்ட, "அப்படியே செய்கின்றேன்,'' என்றாள். என் மாமியும் பொதுநலம் இழைத்துவிட்டு வீடு திரும்பினாள்.

நாளும் நான்கு சென்றது. என் கடிதத்திற்குப் பதிலொன்றும் வரவில்லை. நாளைவரும் நாளைவரும் என்று நாளையில் மனம் ஊன்றி இரண்டுநாளை யகற்றினேன். நாளையோ இன்றாகவில்லை. கலக்கமெய்தினேன். ஜமீன்தார் ஊரில் இல்லையோ என்று நினைத்து ஒருபோது சிறிதுமனந்தேறுவேன். காரியாலய ஊழியனது கவனமின்மையோ என்று மறுபோது எண்ணுவேன். போட்ட கடிதத்திற்குப் பதில்போடும் முறை ஜமீன்தார் மரபுடன் இயைந்ததன்றோ என்று சினங்கொள்வேன். காரியாலய ஊழியன் யாரிடமோ இலஞ்சம் பெற்றுத்தான் இச்சதி புரிகின்றனனோ என்று வாடி மெலிவேன். இன்னபடி நாளும் ஏழு ஆனது. இனி என்ன செய்வது, எவ்விடம் செல்வது யாரையடைவது என்று என்று எண்ணித் திகைத்தேன். தற்கொலை எண்ணமும் என் மனத்தில் தோன்றியதுண்டு. வாயால் நூறுமுறை தற்கொலைசெய்துகொண்டுவிடலாம்; கயிறொன்று கழுத்திலே ஏறுவதுதான் எளியதன்று. வழியொன்றுந் தெரியவில்லை. என்மெய்யும் மனமும் களைத்தன. செயலற்றுப் போனேன். ஏதேனும் நோய்தான் என்னைப்பற்றியதோவென்று தையம்மாள் கவலையுற்றாள். இந்நிலையில் எட்டாவது நாளும் வந்தது. அன்று காலை கடைத் தெருவிற்குச் சென்ற தையம்மாள் சிரித்த முகத்துடன் என்னறை வந்தாள். சிரிப்பின் பொருளும் அச்சிரிப்பினைத் தொடர்ந்த மௌனத்தின் கருத்தும் எனக்கு விளங்கவில்லை. செய்வது என்னவென்று எனக்குத் தோன்றவில்லை. சிறிதுநேரம் அவள் வாயைப் பார்த்து நின்றேன். என்னுள்ளம் துடித்தது. என்னுடலெல்லாம் ஊதையினிடைப்பட்ட துரும்பென ஆடியது. தலை சுற்றியது. எனக்கும் தையம்மாளுக்கும் இடையே பயின்ற மௌனம் என் தலையைப் பிளந்துவிடும்போலிருந்தது. உடனே வாய் குழற, 'தையம்மாள், சென்றனையோ' என்றேன். 'சென்றேன்' என்று விடை தந்தாள். விடையைத் தொடர்ந்து கடிதம் ஒன்றும் வாராததால் அச்சமுற்ற நான், விரைந்து 'எங்குச் சென்றாய். தபால்நிலயம் சென்றனையா. எனக்கு ஒன்றுமில்லையா' என்று கூவினேன். அப்பொழுது மெத்தையினின்று என் மாமி இறங்கும் அரவம் கேட்கத் தையம்மாள் கடிதத்தை என் கையிற் கொடுத்துவிட்டுச் சமையலறை சென்றாள்.

கடிதத்தை நான் வாங்குகையில் இருந்த ஆர்வமும் விரைவும் அதைப் பிரித்துப் பார்ப்பதில் இல்லை. உள்ளே இருக்கும் கட்டுரை மீள்வதற்கில்லாத் துக்கத்தில் என்னை ஆழ்த்திவிடுமோவென்று மிகவும் அஞ்சினேன். கடிதத்தைப் பல முறை திருப்பித்திருப்பிப் பார்த்தேன். சித்தூர்முத்திரை இருக்கின்றதோவென்று நோக்கினேன். கடைசியில் என் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, என் குலதெய்வத்தைப் பிரார்த்தனைசெய்து கடிதத்தைப்பிரித்தேன். பிரித்துப் படித்த

நான் எய்தியா மகிழ்ச்சியோ எல்லை கடந்தது. என்னை யும் அறியாமல் ஒரு சிறு குழந்தைபோல் துள்ளிக் குதிப்பதும், அறையினுள் அங்குமிங்கும் ஓடுவது மாய்ச் சின்னேரம் போக்கிப்பின் மீண்டு மோர்முறை சாவதானமாய் அக்கடிதத்தைப் படித்தேன்.

"அம்மா,நின் மணவாளை ஜமீன்தார்பார்த்தருளினர். இன்னும் ஒருவார கால அளவில் மீண்டு வந்து வேலை யை ஏற்றுக்கொள்ளலாம். வழிச்செலவிற்குப் பணம் தேவையெனின் அனுப்பப்பெறும். வருகிற தேதி யைத் தெரிவித்தால் இரயிலடிக்கு வண்டி வரும்." என்று ஜமீன்தாரின் காரியதரிசி யெழுதியிருந்தார். இக்கடிதம் என்பால் புதுப் பிறவியொன்றை எய்து வித்தது. நற்காலம் வந்ததென மனமகிழ்ந்தேன். இந் நிலையில்மாமனது திருநினைவு என்னைப்பற்றியது என் செய்வதென்று சிந்தித்தேன். 'நற்காலம்வந்தெய்தும் வரை ஈண்டேயிருப்பாய்' என்று பணித்தருளினர். நற்காலமே வந்ததெனத் தோன்றுகின்றது. எனவே வெளிப்போவதால் மாமனது கட்டளையை மீறியவ னாகமாட்டேன், என்று முடிவுசெய்துகொண்டு,நான் புறப்படும் தேதியைக் குறித்து ஒரு கடிதத்தை எழு தினேன். என் கையில் பன்னிரண்டு ரூபாய் இருந் தது. எனவே வழிச்செலவிற்காகப் பணம் கேட்க வில்லை. பிறகு நான் அணிந்துள்ள கருமத்தைத் தையம் மாளிடம் கூறினேன். ஈதறிந்த் தையம்மாள் வருந்தி னள் எனினும், எனது துன்பத்தை வளர்க்க மன மிலாது அவளும் ஒம் என்று கூறினள். அது முதல் நான் கவலையொன்றுமில்லாதவளாய்க் காலத்தைப் போக்கினேன்.

நான் புறப்படவேண்டிய தினமும் வந்தது. தையம் மாள் கட்டுச்சோறு பிசைந்து தந்தாள். தையம்மாள் சொரியும் கண்ணீர் வழியனுப்ப, என் மாமியின் மனையும், எனக்கு அம்மனை சூழ்ந்த துயரமும் பின் னுக, எதிர்கால நலத்தினில் ஊன்றியஎன் மனம் மு ன்னுக இரவு எட்டுமணிக்குக் கொல்லைப்புறமாய் ஒரு வரும் அறியாவண்ணம் வெளியேறினேன்.

---

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[112-வது பக்கத் தொடர்ச்சி]

தவமிலார் சிறுமையைத் தண்மதி காட்டும்.

மதியின் கதியினை இடையிற் கழித்துக் கதிரவனைக் கொணர்வித்ததால், உலகம் மலைந்ததேயன்றி இராவணன்றன் மையல்நோய் மாறியதில்லை. சீலமோ சிந்தையின்கண் இலதாக, புறத்திலேபுக் கொரு கால மும் இடமும் கைப்படு பொருளும் பற்றிப் பற்றிப் பெரிதுழக்குவதால் ஒருவருக்கும் உறுதியொன்றும் வாய்ப்பதரிது. இதனுல், மருட்கையின் பெருக்கமே சுரக்கும் பயன். ஆதலின்,

இனையன வுலகினி னிகழு மெல்லையிற்
கனைகழ லரக்கனுங் கண்ணி னேக்கினன்
நினைவுறு மனத்தையு நெருப்பிற் றீக்குமால்
அனையவத் திங்களே யாகுமா லென்றான்

[இப்படிப்பட்டவைகள் உலகத்தின்கண் நிகழும்போது, ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த இராவணனும், அந்தச் சூரியனைக் கண்ணால் உற்றுப் பார்த்தான். பார்த்து, "இவ ன் நினைக்கின்ற மனத்தையும் நெருப்புப்போல் எரிக்கின் றான், ஆகையால், அத்தன்மை வாய்ந்த அந்தச் சந்திரனே ஆவான் இவன், என்றான்.]

கலங்கிய கருத்தினோர் கண்ணலே பார்த்துமென்! தண்மதி சுடாது, சூரியனே சந்திரனல்லன், ஆயினும் சுடுகின்ற காரணத்தால் இது சந்திரனே என்று முடி வுகொள்ளும் தர்க்கப்பிறழ்ச்சிக்கு இரையாக நிற் கின்ற நிலையினர்க்குக் காட்சிப்பிரமாணந்தானுதவக் கூடியதொன்றுமில்லை. ஏவலாளர் இந்நிலையிலிருந்தில ராதலால்,

திங்களோ வன்றிது செல்வ செங்கதிர்
பொங்குளைப் பச்சையம் புரவித் தேரதால்
வெங்கதிர் சுடுவதே யன்றி மெய்யுறத்
தங்குதண் கதிர்சுடத் தகாதென் றார்சிலர்

[சில பரிசனங்கள், இராவணனை நோக்கி, "செல்வனே, இது சந்திரன் அன்று. ஏனெனில், சிவந்த கிரணங்களை யும் பொங்குகின்ற பிடரி மயிரையும் உடைய அழகிய பச் சைக் குதிரைகள் பூட்டியதேரினை உடையது. அன்றியும், வெப்பமாகிய கிரணங்களையுடைய சூரியன் உன் உடம்பிற் பட்டுச் சுடுகின்றதேயல்லாமல், குளிர்ச்சி தங்கிய கிரணங் களையுடைய சந்திரன் சுடத்தகாது"—என்றார்.]

கேட்டனன் இராவணன். இது தினகரனே, பொல் லாத மதியோ யாவராயினும் வேண்டாவென வெறு த்து வேறொன்று வேண்டுபவனுய்,

நீலச் சிகரக் கிரியன்னவ னின்ற வெய்யோ
னுலைத் தினும்வெய் யனகற்றி யரற்று கின்ற
வேலைக் குரலைத் தவிர்கென்று விலக்கி மேலை
மாலைப் பிறைப்பிள் ளையைக்கூவுதிர் வல்லையென்றான்

[சிகரங்களையுடைய நீலமலைபோன்ற இராவணன், "எதிர் நிற்கும் இச்சூரியன் விஷத்திலும் கொடியவன். இவனை நீக்கி, கதறுகின்ற கடலின் குரலையும் நிறுத்துக என்று தடுத்து, மேற்குத் திசையில் மாலைக் காலத்தில் தோன்றுகின்ற பிறைச்சந்திரனை விரைவில் அழையுங்கள்- என்று கட்டளையிட்டான்.]

சொன்ன னிருதர்க் கிறையம்மொழி சொல்ல லோடு
மந்நா ளினிரம் பியவம்மதி யாண்டொர் வேலை
முந்நா ளினிளம் பிறையாகி முளைத்த தென்று
லெந்நா ளுமருந் தவமன்றி யியற்ற லாமோ

[அரக்கர்களுக்கு அரசனான இராவணன் அவ்வாறு கூறினன். அவ்வார்த்தைகளைக் கூறிய அளவிலே, அன்று தான் முழுக்கலைகளும் நிரம்பியிருந்த அந்தப் பூரண சந்திரன், அப்பொழுது ஒரு புறத்தில், மூன்றும் பிறைச் சந்திரனுகி மாறித் தோன்றியது எனின், அருமையான தவமேயன்றி எக்காலத்திலும் செய்யத்தக்கது வேறொ ன்று உளதோ]

ஆம். தவமுடைப் பெருமையோ, மற்று, தவ மிலாச் சிறுமையோ இவ் வீற்றடி காட்டுகின்றது? முன் பரதனுடன் வனம்சென்ற முனிவர்கள் கங்கையைக் கடந்த விதத்தினைச் செப்பிய கம்பர்,

மய்யறு விசும்பின் மண்ணின்
மற்றமோ ருலகின் முற்று
மெய்வினை தவமே யன்றி
மேலுமொன் றுளதோ கீழோர்



செய்வினை நாவா யேறித்
தீண்டிலர் மனத்திற் செல்லு
மொய்விசும் போட மாகத்
தேவரின் முனிவர் போனர்

[குற்றமற்ற விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் கீழுலகத்திலும், எல்லாவுலகங்களிலும், உண்மையாகக் காரியம் என்று சொல்லத்தகுவது தவமேயல்லாமல் வேறு ஒன்று உளதோ! படைவீரர் முதலியோர் நாவாம் ஏறிச்செல்ல, முனிவர்கள் மாத்திரம், தவம்புரியாத தாழ்ந்தவர்கள், புறக்கருவிகளாகச் செய்த நாவாய்களில் ஏறுவதின்றியே, நினைத்தவளவிற் செல்லவல்ல தம் ஆகாய கமனத்திறமையே ஓடமாகத் தேவர்களைப்போல் கங்கை யைக் கடந்து போனர்.]

எனக்கூறிய கருத்து இவ்வயின் கொள்ளற்குரியது. மெய்வினை எனத்தகுவது தவமொன்றே யாதலின் அது செய்பவர் மேலோர்; மற்று, கைகொண்டு கருவி களாய்ச் செய்யப்படும் வினைகளனைத்தும் கீழ்மைப் பாலன. இவைகளைச் செய்பவர் கீழோர். கீழாய இக்கருவிகள் மேலோர்க்கு வேண்டா. இவ்வாறு கொள்வதின்றி, வேடர் முதலாயினோர் தாழ்ந்த சாதியர்களென்றும், அவர் தொட்டுச் செய்த ஓடங் களைத் தாம் தீண்டலாகாதென்றும், முனிவர் விண் ணிற் சென்றனரென்னக் கம்பர் கழறப்புகுந்ததன்று இச்செய்யுள். வசிட்டர் முதலானோரைச் சிவிகைக ளில் செல்லவைத்திருக்கின்ற நம் புலவர் அதனை மறந்து இங்கிது பேசமாட்டார். அன்றியும், "தக வுடையோர் சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றி ருக்குஞ் சீர்த்தியான்" ஆகிய குகனது மரபினோரை முனிவர், சாதியாற் கீழ்ப்பட்டவர் என மதித்துப் பிழை யிழைப்பாரோ ! மொய்தவப் பெருமையால் முனிவர் விண்வழி செல்லவல்ல ராயினர் எனச்செப் புவது ஒன்றே அங்குக் கம்பர்பிரான் கருத்தாயமைந் திருந்தது.

இங்கு, முழுமதி முந்நாள்பிறை யாயிற்று. இரா வணன் தான் படைத்திருந்த ஆற்றலால் இதனை நிகழ்த்தினன். தவங்கள் சில, பயன்வேண்டி, முயன் றிருந்தனன் அவன் உண்மையே. ஆயினும், சீலமற்ற வன்வனுதலின் இயற்கைக்கு எதிராக உலகத்தை உழக்கும் ஆற்றலே அவனுக்கு அத்தவத்தினுல் எஞ் சியது. "சீலமென்றியுஞ் செப்தவம் வேறு மொன்று உளதோ" எனக் கம்பர்பெருமான் முன் வனம்புகு படலத்தில் காட்டிய இலக்கணத்தின்படி இராவண னுக்குத் தவமொன்று உளதென்று எண்ணுதற்கு இடமுண்டோ என அயிர்த்தல்வேண்டும். அது எவ் வாறாயினும், "தவத்தால் பெற்றிருந்த தன்னுடைய ஆற்றலாலன்றோ இராவணன் முழுமதியைக் குழவித் திங் களாக்கக்கூடியவ னாயினன்; ஆதலின், உலகத் தீரே, நீங்களுந் தவங்கள் செய்வீர்களாயின் இவ் வாறு வேண்டிய வேண்டியாங்கெல்லாம் இழைக்க வல்லவர்களாவீர்" என ஊக்கமுடன் இங்கு அறி வுறுத்தப் புகுந்தனரல்லர் நம் புலவர். மற்று, மதி யின் கதியைக் கருதியே இவ்வாறு கழறுகின்றனர் போலும். இராவணன் ஆட்டிவைத்தபடி யெல்லாம் ஆடவேண்டி நேர்ந்த மதியத்தின் விதியைத்தான் பரிவுடன் பேசுவதாகக் கொள்ளல் நலம். விண்ணிற் கிடந்துமென், மெய்த்தவ மின்மையால் இவ்வெண் மதி, சீலமில்லார் செய்துழக்கும் சிறுமைகளுக்கெல் லாம் ஆளாக நேர்ந்தது கண்டீர்; மெய்வினை முயலா முழுமதி, நிருதர்க்கிறையின் செய்வினைக் கிரையா யிற்று; இதனை ஓர்ந்துகொண்மின்" என உணர்த்துவ திற்றேனே இவ்வயின் கம்பர்தம் ஊக்கத்தைக் காணல் வேண்டும். தவத்தின் சேமமில்லாச் சோமன்றன் கதி இன்னவாறாயிற்று, காண்மின்.

முழுமதி யாயினுலென், முந்நாட் பிறை யாயினு லென்—

குடபா லின்மு ளைத்ததுகண்ட
குணங்க ளையோன்
வடவா வனலன் றெனின்மண் பிடர்
வைத்த பாம்பின்
விடவா ளெயிறன் றெனினென்னை
வெகுண்ட மாலை
அடவா ளுருவிக் கொடுதோன்றிய
தாகு மன்றே

[அப்பொழுது மேற்குத்திசையில் பிறைச்சந்திரன் முளை த்ததுகண்ட, தீய குணங்களை உடையவனான இராவணன், "இது வடவாமுகாக்கினியாகும்; அது அன்றாயின், பூமி யைப் பிடரின்மேற் சுமக்கின்ற ஆதிசேஷனது கூரிய பல்லாகும்; அதுவும் அன்றாயின், என்னைக் கோபித்த மாலைப்பொழுது என்னைக் கொல்வதற்காக வாளை உரு விக்கொண்டு வந்ததுவே இது"—என்றான்.]

தாதுண் சடிலத் தலைவைத்தது தண்ட ரங்க
மோதுங் கடலிற் கிடைமுந்து பிறந்த போதே
ஓதுங் கடுவைத் தன்மிடற்றி னொளித்த தக்கோ
னீதுங் கடுவா மெனவெண்ணிப வெண்ண மன்றே

[குளிர்ந்த அலைகளை வீசும் பாற்கடலின் நடுவிலிருந்து முன்பு தோன்றின பொழுதே, யாவராலும் கொடியது என்று சொல்லப்படுகின்ற விஷத்தைத் தன் கழுத்தில் வைத்து ஒளித்த பெரியோனாகிய சிவபிரான், கொன்றை மலர்களின் மகரந்தப் பொடிபடிந்த தன் சடையில் இப் பிறைச்சந்திரனையும்வைத்துக்கொண்டதற்குக் காரணம், இதுவும் விஷந்தான் என்றெண்ணிய எண்ணமேயன்றோ —என்றான்.]

உருமொக் கவுலைந் துயிர்நுங்கிய திங்க ளோடித்
திரும்பிச் சிறுமின் பிறைதீமை குறைந்த தில்லை
கருமைக் கறைநெஞ் சினினஞ்சு கலந்த பாம்பின்
பெருமைச் சிறுமைக் கொருபெற்றி குறைந்த துண் [டோ

[இடியைப்போலத் திரிந்து என் எதிர்வந்து என் உயி ரை விழுங்கிய பூரணசந்திரனைக் காட்டிலும், சிறுத்த உருவத்துடன் திரும்பிய மின்னல்போல் விளங்குகின்ற இந்த இளம்பிறையினிடத்தில், கொடுமையோ சிறிதுங் குறைந்ததில்லை. கொடிய கோபம் பொருந்திய மனத் தையுடைய விஷமுடைய பாம்பினது, பெரிய உருவத் தைக் காட்டிலும் சிறிய உருவத்திற்குக் கொடுமை ஒரு சிறிதாயினுங் குறைந்திருக்கின்றதோ, இல்லையே,—என் றான்.]

முழுமதியாயிற்று, பரிதி ஆயிற்று, குழவித்திங் களாயிற்று. ஒன்றற்கொன்று கொடுமையிற் குறைந் ததில்லை. இனி எஞ்சியது இருளொன்றே.

கன்னக் கனியும் மிருடன்னையுங் காண்டு மென்றே
முன்னைக் கதிர்நன் றிதகற்றுதிர் முன்பு சான்ற
என்னைச் சுடுமென் னினிவ்வேழுல கத்தும் வாழ் [வோர்
பின்னைச் சிலருய் வரென்றங்கொரு பேச்சுமுண்டோ

[முதிர்ந்த இருளின் தன்மையும் எப்படிப்பட்டதென்று பார்த்துவிடுவோம். இப் பிறைச்சந்திரனிலும் முன்வந்த

சூரியனே மிகவும் நல்லது. இதனை உடனே அகற்றுங்கள். மேன்மைவாய்ந்த என்னையே இது சுடுகின்றது என்றால், பிறகு, இந்த ஏழு உலகங்களிலும் வாழ்பவர்களில் இதற்குத் தப்பிப் பிழைக்கக் கூடியவர் சிலர் இருக்கின்றனர் என்று பேசவுங் கூடுமோ—என்றனன்.]

வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்திற்கு வைகிய பெற்றியை ஓராத இராவணன், தன்னையே வருத்துமித் திங்கட் பிள்ளையைத் தாங்குவார் யாருளரென வியந்தனனாயின், இவ்வாறே இராமனும் முன் மிதிலையில் சீதாபிராட்டியைக் கண்ணுற்ற அம்மாலை,

கன்ன லின்கருப் புச்சிலை யாள்விடை
பொன்னை முன்னிய பூங்கணை மாரியால்
என்னை யெய்து தொலைக்குமென் றாலினி
வன்மை யென்னுமி தாரிடை வைகுமே

[கரும்பு வில்லையுடைய மன்மதன், வாசனையமைந்த மகரந்தப் பொடியோடு கூடிய புஷ்பபாணங்களால் எய்து என்னையே வலிமையழிப்பான் என்றால் இனி வலிமை என்னும் இது யாரிடத்தில் தங்கக்கூடும்.]

என்று நினைத்தனன் ஆயினன். 'கன்ன' எனும் சொல்லால் இவ்விரு செய்யுள்களும் துவக்குவதினின்று, முன்னதன் நினைவுகொண்டே கம்பர் பின்னதைப் பாடினரென எண்ண இடமுளது. எனினும், தத்தம் ஆற்றலின் பெருமிதத்தில் இராகவனும் இராவணனும் ஒரு பெற்றியராய் அமைந்திருப்பார்போல் தோன்றுகின்றனராயினும், மன்மதன் பூங்கணை எத்துணை எற்றினும் தன்னைத் தொலைக்கு மாற்றல் அவனுக்கு இருந்ததில்லை என்னுந் திண்ணிய எண்ணம் இராமனுக்கு இருந்ததுபோல் அப்பாதகத்தின் போக்குக் குறித்து நிற்கின்ற நீர்மையை மனத்துட்கொண்டு, வீரத்தின் வாய்மையில் இராவணனிலும் இராகவன் பலபடி உயர்ந்திருக்கும் செம்மையை ஓர்ந்துகொள்ளல் வேண்டும். என்னையே இந்தப் பிறைமதி சுட்டுவிட்டதால்இனி இவ்வேழுலகினும் உய்வார் யார் என்பான் இராவணன். அன்னால் இராமனோ, மன்மதன் தன்னைத் தொலைப்பதன் அருமையைத் தெரிவித்து அதனின்று வீரவன்மையின் வாய்மையை நிறுவுகின்றனன்.

# திருக்குறள் நீதி

## பொருட்பால்—2. அங்கவியல்

[5-வது வால்யூம் 989-வது பக்கத் தொடர்ச்சி]

### 21. பேதைமை

1. பேதைமை யென்ப தூதியங் கைவிடல்.
2. பேதைமையுட் பேதைமை ஓதியநெறி ஒழுகாமை.
3. நாணமை நாடாமை பேணமை பேதைமை.
4. ஓதியுணர்ந் துரைத்துந் தாணடங்கான் முழுமூடன்.
5. ஒருமையுட் பேதைமை யெழுமைக்குந் துன்பம்.
6. வினைகெடுப்ப தோடு தனைக்கெடுப்பான் மூடன்.
7. பேதை பெருஞ்செல்வ மேதிலார்க்கே யாகிவிடும்.
8. பேதை பணமயக்கம் பித்தன் மதுமயக்கம்.
9. பேதைநட் பொழிதல் பேரின்ப மாகும்.
10. கற்றாரவைக்கட் பேதை குற்றமுண் டாக்கும்.

### 22. புல்லறிவாண்மை

1. அறிவின்மை யின்மை பிறிதின்மைக் கில்லை.
2. அறிவிலா னீகை பெறுபவன் தவமே.
3. தாமேதமை வருத்தும் பேதைக் கெவன்பகை.
4. ஒண்மை யுடையனெனப் பண்ணுபவன் புல்லன்.
5. கல்லாத கற்றமெனச் சொல்லுபவன் புல்லன்.
6. அற்ற மறைத்தென் குற்றம் பேணர்.
7. உபதேசம் பெற்றுமென் உட்கொள்ளான் புல்லன்.
8. சொல்லியுஞ் செய்யாதான் தொல்லையாம் புவிக்கு.
9. அறிவிலார்க் குரைப்பவ ரவரிற் பேதையே.
10. உலகொட்டான் வையத் தலகை யாகும்.

### 23. இகல்

1. இகலென்ப வுயிர்க்குப் பகவெனும் பண்பின்மை.
2. பகல்செய் வார்க்கும் இகல்செய் யற்க.
3. இகல்நீக்கு வார்க்குப் புகழ்நீங் காது.
4. இகலில்லார்க் கெல்லா மின்பம தாகும்.
5. இகலெதிர் செய்வாரை மிகலூக்கு வாரில்லை.
6. இகலினி தென்பான் தவல்கெட லுடையான்.
7. இகல்மேவு மின்னுதார் தகநா லுணரார்.
8. இகலெதிரார்க் காக்கம் மிகலூக்கிற் கேடு.
9. ஆங்கா லிகலென்னுன் போங்கா லெண்ணும்.
10. இகலின்னு நல்கும் நகல்நல்குஞ் செல்வம்.

### 24. பகைமாட்சி

1. வலியுறவு கொண்டு மெலியுற லகற்று.
2. அன்புநாணை வலியிலான் துன்பமக லாது.
3. அஞ்சுவா னறியாதான் தஞ்சமடைவ துறுதி.
4. நிறையிலாக் கோபி செறுவார்க் கெளியன்.
5. பண்பிலான் பகைமை பகைவர்க் கினிதே.
6. மிருகாமி கோபியை வெகுலேசு வெல்லல்.
7. பொருந்தாச் செயலானைப் பொருளீந்தும் பகை [கொள்க.
8. குணநல மற்றவன் பகைவர்க் கெளியன்.
9. அறிவிலான் பகைமை செறுவார்க் கின்பம்.
10. கல்லானை வென்று கொள்புக ழெளிதே.

### 25. பகைத்திறந் தேரிதல்

1. பகடிக் கேனும் பகைபண்ண லாகாது.
2. விற்பகை கொள்ளினுஞ் சொற்பகை கொள்ளற்க.
3. தமியனுய்ப் பலரொடு பகைகொள் வான் பித்தன்.
4. பகைநட்பாய்க் கொண்டான் றகைமைக்கட் டுலகு.
5. துணையிலான் பகையிரண்டில் துணைகொள்வ தொ [ன்றை.
6. தேறினு மறிவின்கட் டேறுன்பகான் விடுக.
7. நட்டார்க்கும் பகைவர்க்கும் பட்டது கூறற்க.
8. வகையறிந்து காப்பானைப் பகைவெல்ல லரிது.
9. களைகளைய வேண்டின் முளையிற் களைக.
10. செயிர்ப்பவர் சிதையா ருயிர்ப்பவ ரல்லர்.

### 26. உட்பகை

1. இன்புறு நிழனீ ரன்பிலா ருறவு.
2. உட்பகைக் கொடுமை வாட்பகைக் கில்லை.
3. உலைவிடங் கெடுக்கு முட்பகை யஞ்சுக.
4. மனமாறு வுட்பகையா லினமாறு வேதம்.
5. உறன்முறை யுட்பகையா லிறன்முறை யேதம்.
6. சொந்தத்தி னுட்பகை யந்தமா முயிர்க்கு.
7. கூடினு முன்பகை கூடா வகத்தே.
8. உட்பகை கொண்டவ ருப்பிட்ட பாண்டம்.
9. எட்பிள வுட்பகை யேதம் பெருக்கும்.
10. அரவொடு வாழினுங் கரவொடு வாழற்க.



### 27. பெரியாரைப் பிழையாமை

1. ஆற்ற லுடையாரைப் போற்றி யொழுகுக.
2. பெரியாரைப்பேணர்க்குப் பேரிடும்பை சேரும்.
3. மாய்ந்துகெட வேண்டின் வேந்தொடு மாறுக.
4. ஆற்ற லற்றார்பிழை கூற்றழைப் பாகும்.
5. வேந்தன் கோபம் விடாது சென்றடும்.
6. எரியாற் பிழைப்பினும் பெரியாரை பிழைத்துய்யார்.
7. அருந்தவர் வெகுளி னரசனுங் கெடுவான்.
8. குற்றமற்றார் சீறிற் குடியோ டழிவர்.
9. இந்திரனும் பொன்றும் பெரியார் வெகுளின்.
10. அரண்வலி யாரையு முரண்தவங் கெடுக்கும்.

### 28. பெண்வழிச் சேறல்

1. பெண்வழி நின்றார் பெரும்பய னெய்தார்.
2. பெண்சுமந்தா னூக்கம் பேதைப் படுத்தும்.
3. மனையா ளஞ்சின் வினையில்லை நாணம்.
4. மனையாளுக் கஞ்சுவான் வினைகள்நன் றாகா.
5. இல்லாளை யஞ்சுவான் நல்லார்க்கு மாகான்.
6. பெருவாழ் வமையினு பெருமை யவர்க்கில்லை.
7. பெண்ணேவ லாண்மையிற்பெண்டானே நன்று.
8. நட்டார்க்கு மாகான் பெண்பெட்டாங் கொழு [கின்.
9. இல்லா ளேவலர்க் கில்லையின் பறம்பொருள்.
10. எண்ணநற் செல்வர் பெண்வழி யொழுகார்.

### 29. வரைவின் மகளிர்

1. பரத்தைய ரின்சொல் வருத்தமே யுறுத்தும்.
2. பணங்கவர் பரத்தைக் கிணங்கா தொழிக.
3. பொருட்பெண் முயக்குப் பிணந்தழுவல் போலும்.
4. அருட்செல்வம் வேண்டிற் பொருட்பெண் பேணேல்
5. மதிநலச் செல்வர் பொதுமகள் புணரார்.
6. புகழ்பெறுபெரியோர் பொதுப்பெண்விரும்பார்.
7. திருத்திய நெஞ்சினர் தேடார் கணிகையை.
8. ஆய்ந்தறி யாருக் கணங்காங் கணிகையர்.
9. வரைவின் மகளிர் நிரயமாம் கண்டீர்.
10. குடிசூது கூத்தி விடியாத் தரித்திரம்.

### 30. கள்ளுண்ணாமை

1. மதுவின் வேட்கை யவமதிப் பாக்கும்.
2. மதிப்பு வேண்டாதார் மதுவேட்கை கொள்வர்.
3. ஈன்றாட் கின்னுக்களி சான்றோர்க் கென்னும்.
4. வீணைக் குடிப்போர்க்கு நாணமே யில்லை.
5. பறியைக் கொடுத்து மறியாமை கொள்ளற்க.
6. துஞ்சினர் செத்தாரே நஞ்சுண்டார் கள்ளுண் [டார்.
7. தினவெறிப் புல்லனைச் சிரிக்கு மவனூர்.
8. கள்ளமாய்க் குடிப்பார்க்கு வெள்ளைப்பேச் சாகாது.
9. குடியர்க் குபதேசம் பிடியா தெஞ்ஞான்றும்.
10. உண்டானைக் கண்டு முண்பவ னொழியானே.

### சூது 31

1. வெல்வதுஞ் சூதிற் பொல்லாது செய்யும்.
2. சூதர்க்கு நல்வாழ்வோ யாதேனு மில்லை.
3. ஆபம் பிடித்தவன் தேயமு மிழப்பான்.
4. சிறுமையும் வறுமையுஞ் சூதான் வருமே.
5. சூதில் தேர்ந்தவர் நாச மடைவார்.
9. சூதருக் கூதியம் வறுமையும் நாசமும்.
7. செல்வமும் பண்பும் சூதாற் கெடுமே.
8. பொருளும் அருளுங் கெடுப்பது சூது.
9. உடுப்பது முண்பதுமின்றிக் கெடுப்பது சூது.
10. சூதிற் காதல் உடலுயி ரொக்கும்.

### 32. மருந்து

1. மிகினுங் குறையினும் நோய்கள் புகுமே.
2. மருந்து வேண்டா பசித்தபின் அருந்தின்.
3. அளவறிந் துண்டால் வளர்ந்திடும் ஆயுள்.
4. பசித்தபின் தக்கவை பார்த்துண்ணல் நன்று.
5. அளவோ டுண்டா லரும்பிணி யில்லை.
6. குறைந்துண்பார்க் கின்பம்போல் மிகைத்துண் [பார்க்குத் துன்பம்.
7. ஊணி னளவு நோயின தளவே.
8. நோயுங் காரணமும் நாடிச் செயல்.
6. காலம் தெரிந்து கொடுப்பது மருந்து.
10. மருத்துவன் மொழிவழி நிற்றல் நன்று.

அங்க இயல் முற்றிற்று.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

**டானிக்குகள் :**

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| **குழந்தைகளுக்கு** | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |




**தைலங்கள்:**

| | |
|---|---|
| சந்தனாதி 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக ,, | 0-12-0 |
| பிருங்காமலக ,, | 0-12-0 |
| **ஸ்திரீகளுக்கு** | |
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L. ச்யாவனப்ராச I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனா மாத்திரை

நஞ்சன்கூடு பல்பொடி

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61. மெடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்த சிற்றமணக்கு எண்ணெய் காஸ்டராலகஸ்

ஜ்வரேக் எல்லாவித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

# கலித்தொகை

[116-வது பக்கத் தொடர்ச்சி]

## பாலைக்கலி 5.

[தலைவன் பிரியப்போவதை அறிந்த தலைவி அவனை நோக்கி, "நீர் செல்லும் கடுஞ்சுரத்தில் உண்டாகும் துன்பத்தை நீர் அனுபவிப்பதேயன்றி யானும் அனுபவிக்குமாறு என்னையும் உடன் அழைத்துக் கொண்டு போவீர்" எனக் கூறியதைக் கூறுவது இச் செய்யுள்.

மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்த
முண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்று
மென்னீ ரறியாதீர் போல இவைகூறி
னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு
மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு?

மரையா மரல் கவர - பெண் மரை மானானது மரலைத் தின்னும்படி, மாரி வறப்ப - மழை நீங்க (அதனால் உயர்ந்த மரம் செடி கொடிகளையுடைய) வரை ஓங்கு மலைகள் வளர்ந்த, அருஞ் சுரத்து - போதற்கு அரிய காட்டின், ஆர் இடை - அரிய வழியில், செல்வோர் - போகின்றவர், புரையோர்தம் - குற்றத்தையுடைய மறவரது, சுரை அம்பு - சுரையை உடைய அம்பு, மூழ்க சுருங்கி - அழுந்துவதால் உடல் சுருங்கி, உள் நீர் - உள்ளே ஊறும் நீர், வறப்ப - வற்றுவதால், புலர்வாடு நாவிற்கு - உலர்ச்சியால் வாடுகின்ற நாவிற்கு, தண்ணீர் பெறாஅ - தண்ணீர் பெறாததால் உண்டாகிய, தடுமாற்று அருந் துயரம் - மனத்தடுமாற்றத்தை யுடைய மிக்க துன்பத்தை, கண்ணீர் நனைக்கும் - கண்ணீர் அவர் நாவிலே விழுந்து நனைத்துப்போக்கும், கடுமைய காடு என்று - கடுமையை உடையன அக்காடுகள் என்று, என் நீர் அறியாதீர்போல (நும்பிரிவால்) யான் இறந்து விடும் தன்மையை அறியாதவர்போல, இவை கூறின் - (யான் நும்மொடு வருதலை மறுத்த) இம்மொழிகளைக் கூறுவதால் என்ன பயன், நெடுந்தகாய் - பெரியோய், நின் நீர அல்ல - (இச்சொற்கள்) நின் தன்மைக்குப் பொருந்துவன அல்ல, அன்பு அற சூழாது - (இனி நீர் எம்மிடத்தில்) அன்பு நீங்கும்படி நினையாமல், ஆற்றிடை - அவ்வழியில், துன்பம் துணையாக நாடின் அது அல்லது - (உண்டாகும்) துன்பத்திற்கு எம்மையும் துணையாகக் கொண்டுபோதலை நீர் நினைப்பதே (எமக்குப் பெரிய இன்பமே) அல்லாமல், எமக்கு இன்பமும் உண்டோ - எமக்கு வேறு இன்பமும் இருக்கின்றதோ?

அன்பு நீங்கின் உயிர் நீங்கும் என்பது கருத்து.

மரல் - ஒருவகைத் தாழை.

சுரை - அம்பிலே அதன் இறகு செருகுவதற்காக அமைந்திருக்கும் குழாய்.

ஆல் - அசை.

# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[134-வது பக்கத் தொடர்ச்சி]

### ஊகாராதி

423 ஊகம் புலியுங் குரங்கு மையமும்.
424 ஊக்க முற்சாகமும் வலியு மூண்மையும்
உள்ள மிகுதியு முயற்சியு மாகும்.
425 ஊசி யெழுத்தாணியுஞ் சூசியு மாகும்.
426 ஊதிய மிலாபமுங் கல்வியு மாகும்.
427 ஊமை கீரியு மூங்கையு மாகும்.
428 ஊரி புயலுஞ் சங்கு மாகும்.
429 ஊர் பரிவேடமும் நகரு மாகும்.
430 ஊர்தி சிவிகையும் தேரும் விமானமும்
பாண்டிலுங் குதிரையும் யானையு மாகும்.
431 ஊர்தல் தடவலுஞ் சிதறலும் நடத்தலும்.
432 ஊழே பகையும் பழமையும் விதியும்
பெற்றியும் வெயிலும் பேசப் படுமே.
433 ஊழி பாருங் காலமு முகமும்.
434 ஊழ்த்தல்தா னினைத்தலும் பதனழிவுஞ் செவ்வியும்.
435 ஊறு தீமையுந் தீண்டலுங் கொலையும்
இடையூ றுமென வியம்ப லாகும்.
436 ஊற்று நீரூற்று மூன்றிய கோலுமாம்.
437 ஊனே யிறைச்சியும் செல்லு மாகும்.

ஊகார வருக்கம் முற்றிற்று.

### எகர வருக்கம்

438 எகினம் கவரி மாவும் நீர்நாயும்
நாயும் புளியு மன்னமு மானும்
புளிமா வுமெனப் புகல லாகும்.
439 எஃகே வேலுங் கூர்மையு முருக்கும்.
440 எக்கர் சொரிதலுங் குவிதலு மிசைக்கும்.
441 எகினி புளிமாவுஞ் சிந்தமு மாகும்.
442 எச்சம் மகனுங் குறைவும் வேள்வியும்.
443 எட்டி காஞ்சிரையுஞ் செட்டியு மியம்பும்.
444 எண்சோ திடமு மெளிமையு மெண்ணும்
விசாரமு மெள்ளும் விளம்ப லாகும்.
445 எண்டோளி காளியுந் துர்க்கையு மாகும்.
446 எயில் திரிபுரமு மதிலு மாகும்.
447 எய்த்தல் இளைத்தலும் அறிதலு மாகும்.
448 எருவை செம்புங் கழுகுங் கள்ளுங்
இரத்தமுங் கோரையுங் கொறுக்கையு மியானையும்
நாணலுங் கோகு நவில லாகும்.
449 எருக்குதல் [1]பரித்தலும் வெட்டுக் கடையும்
கோறலு மெனவே கூற லாகும்.
450 எருத்தே யுரலுங் கிளிஞ்சிலு மாகும்.
451 எல்லே பகலு மிகழ்ச்சியு மொளியும்
இரவியு மிராவு மிருளு மாகும்.
452 எலிகா ரெலியு மதுவு மாடியும்.
453 எல்லை பகலுங் குரோசமு மிரவியும்
அர்த்தமு மளவு மாகு மென்ப.
454 எவ்வந் துன்பமும் தனிமையு மிசைக்கும்
455 எழினிகிடை யாடையு மிடுதிரையு மாகும்.

(பிர்தி)—1 பழுத்தலும்.



456 எழிலே யழகு மிளமையு மாகும்.
457 எள்ள னகையு மிகழ்ச்சியு மாகும்.
458 எற்றுதல் புடைத்தலு மெறிதலு மாகும்.
459 எற்று வெத்தன்மைத் தென்றலு மொத்தலும்
இரக்கமு மெறிதலு மியம்ப லாகும்.
460 எறுழ்வலியுந் தூணுந் தண்டு மாகும்.
461 என்றூழ் வெயிலுங் காற்று மிரவியும்
கோடைக் காலமும் கூற லாகும்.

எகர வருக்கம் முற்றிற்று

### ஏகார வருக்கம்

462 ஏங்க லேங்குதலு மிரங்கலு மொலியும்.
463 ஏடகந் தெங்கும் பனையுநல் லாடையும்
ஓருரும் பலகையு முரைக்க லாகும்.
464 ஏடு குற்றமுங் கண்ணிமையு முலகும்
பூவித ழும்பனை யேடும் புகலுவர்.
465 ஏணி யுலகமு மெல்லையு மேணியும்
இறைவையு மானு மியம்ப லாகும்.
466 ஏண் வரையறையும் வலியும் நிலையுடைமையும்.
467 ஏதந் துன்பமுங் குற்றமு மாகும்.
468 ஏதி யாயுதமும் வாளு மாகும்.
469 ஏதல் போதலு நாவாயு மாகும்.
470 ஏந்தல் பெருமையு மலையு மேடும்
ஏந்துதலு மிறையு முதலு மாகும்.
471 ஏந்திரந் திரிகையு மிரதமு மதிலும்
ஆலையு மெனவே யறைய லாகும்.
472 ஏமம் சேமமுங் காவலு மின்பமும்
இரவும் பொன்னு மேமாப்பு மயக்கமும்
வலியுங் கலையு மீறும் வகுத்தனர்.
473 ஏரே யழகும் பெற்றமு மாகும்.
474 ஏலமயிர்ச் சாந்தும் ஏலமுந் துடியும்.
475 ஏல்வை பொழுதும் வாவியு மாகும்.
476 ஏவல் வியங்கோளும் வறுமையு மாணையும்.
477 ஏறு அசுபதியு மெருது மிட்டமும்
இடமும் ஆண்விலங்கு மிடியு மோர்தருவும்.
478 ஏற்றல் ஏோடலு மெதிர்ந்து பொருதலும்
ஏற்றலு மெனவே யியம்ப லாகும்.
479 ஏனை யொழிவு மிடைச்சொல்லு மாகும்.
480 ஏனாதி சேனைத் தலைவரு மறவனும்
மந்திரியும் நாவிதனும் வகுத்தனர் புலவர்.
481 ஏனம் பன்றியும் மானும் ஆகும்.
482 ஏனல் செந்தினையுந் தினைவிளை புனமும்.
483 ஏவிடைச் சொல்லுந் [2]தேற்றமும் வினவும்
ஈற்றசையு மம்பு மிகழ்ச்சியு மாகும்.

ஏகார வருக்கம் முற்றிற்று

### ஐகார வருக்கம்

484 ஐநீலஞ் சாதிக் காயுமில வங்கமும்.
485 ஐயை தவப்பெண்ணுங் காளியுந் துர்க்கையும்
தலைவியும் புதல்வியு மிடைச்சியு முமையும்
486 ஐப்பசி மாதமு மசுபதியு மாகும்.
487 ஐயிடைச் சொல்லு மழகுங் கோழையும்
இருமலுஞ் சுவாமியும் பதியு மத்தாரமும்
நாதனு மெனவே நவில லாகும்.

ஐகார வருக்கம் முற்றிற்று

### ஒகர வருக்கம்

488 ஒடுக்க முடியச் செய்தலு மொடுக்கமும்.
489 ஒடுங்கல் கைக்கொளலு மொடுங்கலு மாகும்.
490 ஒட்டுப் படைவகுப்பு மொன்றுதலு மாகும்

(பி - ம்) 2. தோற்றமும்.

491 ஒண்மை யொழுங்கு நன்மையு மறிவும்
அழகு மிகுதியு மறைய லாகும்.
492 ஒதுங்கல் போகுதலு மொதுங்கலு மாகும்.
493 ஒதுக்க மறைவும் வாயிலும் வழியும்.
494 ஒத்த னடுவு மொப்பு மாகும்.
495 ஒப்புப் பெருத்தலு முவமையு மெழிலும்
இசையு மெனவே யியம்ப லாகும்.
496 ஒப்புர விணக்கமு மீகையுங் கடனும்.
497 ஒல்லைசிறு பொழுதுந் தொல்லையும் விரைவும்.
498 ஒலிகாற்று மிடியு மோசையும் மொழியும்.
499 ஒலியல் மாலையு நோயுந் தோலும்
ஆடையு நதியு மறைய லாகும்.
500 ஒருத்தல் விலங்கேறுங் கரடியும் பன்றியும்
யானையுங் குதிரையும் புலியும் மானும்.
501 ஒழுகுத லொழுகு நீர்த்துளியு நெடுமையும்
நேர்மையு மெனவே நிகழ்த்த லாகும்.
502 ஒழுக்கம் வழியு மாசாரமு மொழுங்கும்
உயர்ந்த குலமு முரைக்க லாகும்.
503 ஒளிமுச் சுடரும் ஒளிப்பிடமும் விளக்கும்
புகழுங் கிரணமுங் கேட்டையு மாகும்.
504 ஒளிவட் டஞ்சக் கரமு மாடியும்.
505 ஒள்ளியோன் வியாழனுஞ் சுக்கிரனு மாகும்.
506 ஒற்றே யொற்றனு மொற்றெழுத்து மாகும்.
507 ஒற்ற லொற்றலு நீங்கலு மாகும்.
508 ஒன்று [1]பொருந்தலு மோரெண்ணு மாகும்.

ஒகர வருக்கம் முற்றிற்று

### ஓகார வருக்கம்

509 ஓகை வாவென்றலு முவகையு மாகும்.
510 ஓங்க லோங்கலு மலையும் வேயும்
தோணியு மேடு முயர்ச்சியு மியானையும்.
511 ஓசை பேரொலியும் வாழையு மாகும்.
512 ஓட லோடலு [2]மச்சக் குறிப்பும்.
513 ஓட்ட மேலுதடு மேலுந் தோல்வியும்.
514 ஓடை நீர்நிலையுங் கிடங்குமோர் கொடியும்
யானைப் பட்டமும் பாதையு மாகும்.
515 ஓணம் மாயோ னாளு மாறும்.
516 ஓதிமங் கவரி மாவு மன்னமும்
மலையு மெனவே வழங்க லாகும்.
517 ஓதனம் பெருமறையுஞ் சோறு முணவும்.
518 ஓதி பெண்மயிரும் பூனையு மலையும்
[3]ஓந்தியு ஞானமு மன்னமு மாகும்.
(பி - ம்) மாவுமல்லவும்.
(பி - ம்) மறிவு.
519 ஓதங் கடலுங் கடற்றிரையு மோதமும்
ஈரமு மெனவே இயம்ப லாகும்.
520 ஓதை மேடையும் மொலியும் மதிலும்.
521 ஓரம் சகாயமும் விளிம்பு மாகும்.
522 ஓரியாண் மயிரும் முசுவுமோர் வள்ளலும்
நரியுமாச் சேக்கையு நவில லாகும்.
523 ஓரைபெண் குழுவு மிராசிப் பெயரும்
பெண்கள் கலனும் பெண்க ளாடுதலும்.
ஓரியும் கு[ர]வையுந் தோழியு மிடைச்சொல்லும்.
524 ஓல மொலியும் பாம்புங் கடலும்.
525 ஓளி யொழுங்கும் யானைக் கூடமும்.
526 ஓவே கலிங்கிலுறு கதவு நீக்கமும்
இரக்கமும் வாரக்கையு மியம்ப லாகும்.

ஓகார வருக்கம் முற்றிற்று.

(பிரதி)—1. முற்றியு. 2. மாவு மல்லவும். 3. ஒற்றியு.

## கலாநிலயச் சொல்லூடாட்டம் 13.

**இடம்—வலம்**

2. ஓர்வகை நெல்.
4. வீடு.
6. ஓர் மாதம்.
8. ஓர் மரம்.
10. கர்ப்பம்.
11. ஆகாயம்.
13. வறுமை.
15. ஓர் கிரகம்.
17. நிச்சயம்.
19. ஓர் நதி.
21. எண்ணுவது.
24. தகுதியில்லாதவர்.
27. வலிமை.
28. அறு சுவைகளில் ஒன்று.
30. பிளந்த.
31. சூரியன்.
33. யாழ் நரம்பு.
34. வருத்தம்.



**மேல்—கீழ்**

1. பார்வதி.
2. ஓர் கிரகம்.
3. பாவம்.
4. கழுவு.
5. நீர்.
7. குளிர்.
9. பெரிய.
11. வஞ்சனை.
12. ஆகாயம்.
13. மூதேவி.
14. செறிந்த.
16. இறைவா!
18. ஆசிரியன்.
20. உதவு.
21. படைத்தவன்.
22. வாருகோல்.
23. தோத்திரம்.
25. ஓர் இராகம்.
26. தங்கி.
27. தள்ள.
29. பட்டினம்.
32. அலை.

**கடைசி நாள் :—1932-வது வருடம், மார்ச் மாதம், 27 தேதி.**

பரிசு:—கலாநிலயம், 1928, 1930, 1931, 1932 ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லேதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணுவுக்குக் காலணுத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணு பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை **மானேஜர், கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.** என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

## வர்த்தமானம்.

**இந்தியத் திருத்தம் :**—சென்ற வாரம் காமன்ஸ் சபையில் இந்தியச் சீர்திருத்த விஷயமாய் விவாதம் நடந்தது. கன்ஸர்வெட்டிவ் கட்சியினர் அவ் விஷயத்தில் செய்யவேண்டியது பற்றி யோசனை கூறும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தனர். இதை மிஸ்டர் பேஜ் கிராட்டன் என்பவர் எதிர்த்தார். அவர், இந்தியாவின் எதிர்கால அரசியல் சீர்திருத்த விஷயமாக இப்பொழுது எவ்வித அறிக்கையும், யோசனையும் கொண்டுவரக்கூடாதென்றும், அப்படிச் செய்வதுகொள்கையில் மாறுபாட்டை உண்டாக்குமென்றும், அல்லதுசீர்திருத்த விஷயத்தில்சுதந்தரத்துடன் பரிசீலனை செய்யும் உரிமையைக் கட்டுப்படுத்திவிடுமென்றும் கூறினர். மேலும் சீர்திருத்த விஷயமான எதையும் செய்யுமுன் இந்திய அரசியல்கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென்றும் கூறினர். இதைப் பலர் ஆதரித்தனர் என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

**ஸ்ரீ C. R. சீனுவாஸ ஐயங்கார்:**—கும்பகோணத்தில் மிஸ்ஸஸ் ஜெயராம ஐயர் தலைமையில் அகில இந்திய சங்கீத மஹாநாடு கூடிற்று. அங்கு ஸ்ரீமான் C. R. சீனுவாஸ ஐயங்காருக்கு அபிநவ தியாக பிரம்மம் என்னும் பட்டம் அளிக்கப்பட்டதாம். அவர் சங்கீத விஷயத்தில் உழைப்பதைப் பாராட்டி அவருக்குத் தோடா ஒன்றும் பரிசாக அளிக்கப்பட்டதாம்.




சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

**தமிழகராதி ஆதார நூற்றொகுதி நாம தீப நிகண்டு.**

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

**அரும்பொருள் விளக்க நிகண்டு.**

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

**கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.**

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

**திருக்குறள்**

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

**களவியற் காரிகை.**

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

**நூற்பொருட் குறிப்பு.**

1. இறையனூர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

**இராஜசுந்தரம்.**

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

**தினகரமாலை யென்னும்-தினகரவெண்பா**

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணு **0-6-0**

**கலாநிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**



**திராவிடப் பிரகாசிகை**

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவாளுய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ருங பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரு 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், குவாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை, 20, காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை.



**ANCIENT JAFFNA**

**MUDALIAR C. RASANAYAGAM C. C. S.**

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

**PRICE Rs. 5-8-0.**

KALANILAYAM
Purasawalkam, Madras.

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 3. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினுல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**— K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 60.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எட்டுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்ரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.




# வர்த்தமானம்

**பாம்பு கடிக்கு இலவச சிகிச்சை:**—திருப்பூரில் பல வருஷகாலமாய் ஸ்டேஷன்மாஸ்டாரயிருந்த ஸ்ரீமான் P. சீனுவாஸ ஐயர் பாம்புகடிக்கு இலவசமாய்ச் சிகிச்சை செய்துவந்ததை அனேகர் அறிவர். இப்பொழுது அவர் இறந்துவிட்டார். தறகாலம் அவரது குமாரர் திருப்பூரில் வக்கீலாக விருக்கின்றார். அவர் அறிவிப்பதாவது:—"எனது தகப்பனார் பாம்புகடி சிகிச்சை மந்திரத்தை எனக்கு உபதேசித்திருக்கின்றார். பாம்புகடி யுண்டவர் எந்த நேரத்திலும் எந்த சமயத்திலும் என்னிடம் வந்து சிகிச்சை பெற்றுப் போகலாம். வெளியூரில் இருப்பவர்கள் பாம்பு கடித்த நேரத்தையும் கடியுண்டவர் பெயரையும் தந்திமூலம் அறிவித்தால்போதும். என்னிடம் அச்செய்தி கிடைத்ததும் விஷம் இறங்கிவிடும். சிகிச்சை எல்லோருக்கும் இலவசமாய் அளிக்கப்படும்." இவர் விலாசம்—S. இராஜம் ஐயர் B.A. B.L. திருப்பூர்.

***

**பூரி சங்கராச்சாரியார்:**—மலையாளத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த பூரி சங்கராச்சாரியார்ய ஸ்வாமிகள், சென்ற வாரம் செவ்வாய்க்கிழமை யன்று சென்னை வந்து சேர்ந்தார். அவருக்குத் தமிழ் தெலுங்கு, சமஸ்கிருதம், ஆங்கிலம், கன்னடம், ஹிந்தி முதலிய பல பாஷைகளில் நல்ல பாண்டித்தியம் உண்டாம். அவர் சென்னையில் அரிய உபந்யாசங்களைச் செய்து வருகின்றார்.

***

**மனித மீன்:**—ஆப்பிரிக்காவைச் சேர்ந்த கடலோரத்தில் தலைமுதல் இடுப்புவரை மனிதரைப்போன்ற சாயல்கொண்ட ஒருவகை மீன்கள் அகப்படுகின்றனவாம்.

***

**57 லட்சம் சந்தாதார்:**—ஜப்பானில் நடைபெறும் அசாகி என்னும் தினசரிப் பத்திரிகைக்கு 57 லட்சம் சந்தாதார் இருக்கின்றனர் என்று தெரிகின்றது.

***

**வண்ணாத்திப்பூச்சிகள் தேவை:**-200000 வண்ணாத்திப் பூச்சிகள் தேவை என்று ஜெர்மன் அரசாங்கத்தார் விளம்பரம் செய்திருக்கின்றனராம். அப்பூச்சிகளிலிருந்து ஒரு விதச் சாயம் எடுக்கலாம் என்று ரசாயன ஆராய்ச்சியாளர் கருதி ஆராய்ச்சிக்காக அப்பூச்சிகளைத் தங்களுக்குச் சேகரித்துக் கொடுக்கும்படி அரசாங்கத்தாரைக் கேட்டனர் என்றும் அதற்காகவே அரசாங்கத்தார் விளம்பரம் செய்திருக்கின்றனர் என்றும் தெரிகின்றது.

***

**200 பாஷை அறிஞர்:**—ஜெர்மனியிலுள்ள கல்ரோன் சர்வகலாசலையில் பண்டிதராயிருந்த டாக்டர் லட்விக் ஹெரால்டு ஹூடெஸ் என்பவர் 200 பாஷைகள் கற்றவராம். அப்பாஷைகளில் பேசவும் எழுதவும் அவர் வல்லவராம். பல பாஷைகளில் நூற்களும் செய்துளாராம். சென்ற மகாயுத்த காலத்தில் அவர் ஜெர்மன் படையில் பல பாஷைப் பண்டிதராயிருந்தாராம்.

***

**திப்புவின் தலைப்பாகை:**-மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் உபயோகப்படுத்திய சிவப்பு நிறமுள்ள தலைப்பாகை லண்டனில் கண்காட்சிச் சாலையில் வைக்கப் பெற்றிருக்கின்றதாம். இத்தலைப்பாகை அழகிய வேலைப் பாடுடையதாம்.

***

**மாண்டவன் மீண்டான்:**—பாட்னாவிற்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் 14 வருஷத்திற்கு முன் ஒரு ஹிந்து வாலிபனைப் பாம்பு கடித்தது. பெற்றோர் முயன்ற முயற்சியால் விஷம் இறங்கவில்லை. பிறகு அவர்கள் அவனைக் கங்கையில் கொண்டுபோய்ப் போட்டுவிட்டனர். கங்கையில் போடப்பட்ட அவனுடல் ஓரிடத்தில் கரையில் ஒதுக்கப்பெற்றது. அப்பிரேதத்தைக்கண்ட ஒரு பாம்பாட்டி அருகு சென்று பார்க்கச் சுவாசம் ஓடிக்கொண்டிருப்பது கண்டு, பின் சோதித்ததில் பாம்புகடியென்று அவனுக்குத் தெரியவரவே, அவன் மந்திரித்து விஷத்தை இறக்கிவிட்டான். பிறகு அவ்வாலிபன் பல விடங்களைச் சுற்றிக் கடைசியில் பாட்னா வந்துசேர்ந்தான். அவன் தன் பெற்றோரையும் உறவினரையும் கண்டுகொண்டான். அவர்களும் அவனை ஏற்றனராம்.

***

**ஜப்பான்:**—சீன ஜப்பான் யுத்தம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. சர்வதேச சங்கத்தார் செய்த ராஜி ஏற்பாட்டை ஜப்பான் அரசாங்கத்தார் ஏற்க மறுக்கின்றனர். எனவே சர்வதேச சங்கத்தினின்று விலகவும் ஜப்பானியர் தயாராகவிருக்கின்றனராம். இது விஷயமாய்ச் சர்வதேசத்தார்களுக்குள் ஓர் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றதென்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

**இங்கிலாந்தில் வேலை யில்லாமை:**—இங்கிலாந்தில் நாளுக்கு நாள் வேலை யில்லாமை அதிகரித்து வருகின்றதென்றும், அரசாங்கத்தார் கையாளும் முறை பொருளாதார நிலையைச் சீர்திருத்தவில்லையென்றும், அரசாங்கத்தார் புதியவரி போடக்கருதியது கண்டிக்கத்தக்கதென்றும் தொழிற்கட்சியினரான மிஸ்டர் லான்ஸ்பரி காமன்ஸ் சபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து தற்கால அரசாங்க முறையைப் பலமாகக் கண்டித்தார். தொழிற் கட்சி அரசாங்கம் விவகரித்தால் எல்லாம் அகன்று விடும் என்பது லான்ஸ்பிரியின் அபிப்பிராயம். ஜனங்கள் தத்தம் வரை செம்மையுறுதவரை எந்த வரசாங்கத்தாலும் எச்சீர்திருத்தமும் செய்து மக்களை உயர்த்திவிட முடியாது என்பதை அரசியல் வாதிகள் ஏனோ அறிவதில்லை.

***

**சட்ட சபை உபத்தேர்தல்:**-திவான் பகதூர் ஆரோக்கியஸாமி முதலியார் இறந்ததால் ஏற்பட்ட சென்னைச் சபைக் காலி ஸ்தானத்திற்கு, திவான் பகதூர் A. அப்பாதுரைப் பிள்ளை, ஸ்ரீமான் T. குழந்தை B. A. B. L. பாரிஸ்டர், ஜியார்ஜ் ஜோஸப் ஆகிய மூவர் நிற்கின்றனர் என்று தெரிகின்றது.

***

**ஸர். J. C. போஸ்:**—பரோடா அரசர் அழைப்பிற் கிணங்கி ஸர் J. C. போஸ் பரோடாவில், அரசரின் தலைமையில் சில பிரசங்கங்கள் செய்தனராம். அப்பொழுது தாவர உலகினில் தாம் செய்துள ஆராய்ச்சியை விரிவாகக் கூறினராம். மனிதர் இதயம் துடிப்பது போலவே தாவரங்களின் ஹிருதயமும் துடிப்பதை ஒரு கருவியின் உதவிகொண்டு எல்லோருக்கும் காட்டினராம். சிருஷ்டியில் தாவரமாகட்டும், பிராணிகளாகட்டும் எல்லாம் ஒரு தன்மையானவை என்பதை விளக்கினராம்.

***

**உடற் பயிற்சி:**—கல்கத்தா சர்வ கலாசாலையார் மாணவர்களுக்கு உடற்பயிற்சி அளிப்பதற்காக ஓர் உடற்பயிற்சி திட்டத்தைத் தயாரித்திருக்கின்றனராம். அத்திட்டத்தின்படி மாணவர்களுக்கு உடற்பயிற்சியும் கலாசாலைகளில் இனி ஒரு பாடமாகப் போதிக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

KALANILAYAM
Reg. No. M. 2324.

# — கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு
முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

---

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

## ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 58 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இலும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

---

## கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

---

## பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 328, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

---

## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

## FIRE & ACCIDENT RISKS

**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)